8 JUL 1957
MADRAS
112185

உ

புகழேந்திப்புலவர் அருளிச்செய்த

பெரிய எழுத்து

மதுரைவீரசுவாமி கதை

[படங்களுடன்]

அமரம்பேடு. இராஜரத்தின முதலியார்

மலர்மகன் விலாசம் பிரஸ்

23, தாண்டவராயப்பிள்ளை வீதி,

சென்னை - 1.

1957

இதன் விலை ந-ப. 75

கிடைக்குமிடம்:— சரஸ்வதி புத்தகசாலை

175, செட்டியார் தெரு, கொழும்பு.

மதுரைவீரசுவாமி துதி

உலகமிசை மன்னுயிர்கள் தன்னுயி ரெனக்கருதி
ஒருகவிகை நிழலி னின்றே
இன்னலர் தமைஜெயித் தோங்குசெங் கோலோச்சி
உயர்காசி நகராளு வோன்
உளமகிழ்ந் திடமதலை யாயுதித் தாயன்று
வொல்கு காட்டில் வைகியே
உரகனா லாதரவு பெற்றபின் புன்னுட்டி
லுறை மாதிகன் மனையினில்
நில்லெனத் தோன்றியவ னல்வீர னென்றுபெயர்
நிலையாகவே யடைந்தே
நிருபனும் பொம்மணன் சீமையுற் றவனீன்ற
நேரிழை தனைக் கவர்ந்தும்
நிறைபுகழ் பெறும்விஜய ரங்கனெனு மன்னனது
நீள்வாயல் காவல் செய்தும்
நிகரில்பல வளமெய்து மதுரையிற் கள்ளர்தமை
நெஞ்சக் கலங்க மோதி
வலனுயர்த் தேசல்ல குணபூஷ ணங்கொள் திரு
மலைநாய்க்க னிடமேவியே
மங்கைவெள் ளம்மையைக் கண்டன்பு பூண்டவளை
மருவிடச் சிறை யெடுத்தும்
மதிதவழு மாடமச் சிகரகோ புரமதனில்
வளர்சொக்க நாத ரருகில்
மன்னுமீ னாட்சியரு ளிணையடைந் தேயும்பர்
வாழ்த்தி மலர்மாரி சொரிய
இலகுமவ் வாலயத் துள்வயங் குங்கனக
வெழில்கம்ப மதில் மேவியே
இப்புவி நிஷித்தியார்த்த மிரிசிகுட் டிச்சாத்தான்
ஏவல்சூன் யத்தி னுடனே
இருமல் காமாலைகுன் மக்குட்ட மண்டையிடி
ஈளை மந்தார காசம்
இவையெலாந் தீர்த்திடுந் தெய்வமே யென்முன்வந்
திருதருண மருள் சரணமே.

உ

கடவுள் துணை

மதுரைவீரசுவாமிகதை

காப்பு

துதியும் வீரமுஞ் சொல்லுநற் கீர்த்தியும்
அதிக வித்தையு மாண்மையுந் தானுறும்
மதுரை வீரன்றன் மாகதை வாழ்த்திடக்
கதிர்கொள் சித்தி விநாயகன் காப்பரோ.

பாயிரம்

வெண்செந்துறை

சித்திவிநாயகர்தஞ் செய்யபதம்போற்றி
முத்தியளிக்கு முருகர்ப்பதம்போற்றி
சொக்கர்திருவடியை தொழுதுமிகப்போற்றி
தக்கதிருமாலின் றாட்டாமரைபோற்றி
அங்கயற்கண் ணம்மை இளப்பொற்பதம்போற்றி
மங்கையிலக்குமியின் மலர்ப்பாதந்தான்போற்றி
தெள்ளுதமிழாசான் திருவடியைத்தான்போற்றி
வள்ளிதெய்வானை மலர்ப்பாதந்தான்போற்றி
வாணிதிருவடியை வாழ்த்திமிகப்போற்றி
மாணிக்கவாசகர்தம் மன்னுபதப்போற்றி
செப்பரியசப்பந்தர் செம்பொற்பதம்போற்றி
அப்பர்திருவடியை அன்புடனேதான்போற்றி
சுந்தரமூர்த்தியிரு துங்கப்பதம்போற்றி
சொந்தமிகுந்தசிவத் தொண்டரடிபோற்றி
பாண்டிவளநாட்டிற் பானுவைப்போல்விளங்கும்
ஆண்டகையாமெங்க ளதிவீரன்காதைசொல்வேன்

கதையின் வரலாறு

நாட்டுச்சிறப்பு

மாதமும்மாரி வழங்கும்வளநாடு
காதமணம்வீசுங் கற்பகஞ்சேர்நன்னாடு
கரும்பின்கணுக்கள்முத்தைக் காட்டும்மகாநாடு
விரும்பியறம்வளர்க்கு மேலானநன்னாடு

முப்போகமும்விளையும் மூதோர்வாழ்நன்னாடு
எப்புறமுங்கங்கை இலங்குந்திருநாடு
நவதானியம்விளையும் நல்லவளநாடு
தவமறையோர்மாமுனிவர் தங்கும்வளநாடு
தாமரைப்பொய்கைகளும் தண்மலர்சேர்வாவிகளும்
ஆமையுலாவு மழகானகேணிகளும்
பொன்னுமணிகொழிக்கும் புண்ணியவாறுகளும்
மன்னுந்தராளம் வழங்கியவோடைகளும்
சங்குதவழ்ந்துலவுந் தாழ்வில்லாநஞ்சைகளும்
எங்குமணிவிளையு மெழிலானபுஞ்சைகளும்
பாக்குமரச்சாலைகளும் பண்மலர்ப்பூச்சோலைகளும்
தேக்குமரக்காவிகளும் செங்கரும்பூச்சோலைகளும்
சண்பகப்பூநந்தவனம் தானேமிகுந்தவனம்
விண்ணுலவுதோப்புகளும் வீறுகனித்தோப்புகளும்
மல்லிகைமலர்பந்திகளும் மருக்கொழுந்தின்பந்திகளும்
முல்லைமலர்ப்பந்திகளும் முக்கனிமாப்பந்திகளும்
வானத்தளாவிநிற்க வைத்திடுநெற்பொருளும்
தானங்கொடுக்கவைத்த தாழ்வில்களஞ்சியமும்
காமதேனுக்குநிகர் கணக்கில்லாப்பால்பசுவும்
சேமமிகுஆடுகளும் திரளானமாடுகளும்
பசித்தோர்இளைப்பாறப் பாங்கானசத்திரமும்
புசித்தோர்க்குசம்போகம் பொருந்துசிலசத்திரமும்
ஆடையில்லார்க்குஆடை அளித்துவருஞ்சத்திரமும்
வாடைபனிநீர்புழுகு வழங்கிவருஞ்சத்திரமும்
வேதியர்க்குவேதம் விளங்கும்அறச்சாலைகளும்
சாதிக்குச்சாதி தங்கமரச்சாலைகளும்
குயிலோசைமிஞ்சுங் குறைவில்லாமாந்தோப்பும்
மயிலாடிநிற்க வாய்த்தபலாத்தோப்பும்
அன்னங்குலாவு மரவிந்தப்பூந்தடமும்
வன்னக்கிளிகள்கொஞ்சும் வளமானநல்மரமும்
இன்னவளமிகுந்த வெழிற்காசிநன்னாடு
தன்னையுரைக்கச்சேடன் தன்னாலுமாகாதே

மலைவளம்

வாரணிவாசியைச்சூழ் மலைவளத்தைசொல்லுகிறேன்
ஆரணமாமுனிவர் அணியணியாய்த்தவமிருப்பார்

காட்டுப்பசுவுங் கடுப்புலியுங்கலந்திருக்கும்
நாட்டுப்பசுவோடு நட்பாய்புலிகுலாவும்
பருந்தும்பைங்கிளியு மொருபஞ்சரத்திலேவாழும்
பொருந்தாவின்வாயி லெலீபோய்புகுந்துபள்ளிகொள்
பச்சோந்திமயிலும் பட்சமுடன்வாழ்ந்திருக்கும் [ளும்
செச்சையும்ஓனுயுஞ் செருக்குடனேகூடி நிற்கும்
சிங்கமும்யானையுஞ் சேர்ந்துவிளையாடி நிற்கும்
பொங்கரவுமந்திகளும் பொருந்தியுறவாயிருக்கும்
இந்தவளமிகுந்த வெழிற்காசிமாமலையைக்
கந்தனதுவாயாலுங் கட்டுரைக்கமிக்கரிதே

நகரச் சிறப்பு

காசினியோர்வாழுங் காசியெனுமாநகரம்
தேசுமிகுந்திலங்குந் தெய்வீகமாநகரம்
செம்பொன்மதில்சூழ்ந்த சிங்காரமாநகரம்
அம்பொன்னால்மாடகூடம் அமைந்திருக்குமாநகரம்
கோபுரமெங்குங் குலவுந்திருநகரம்
மாபுரமன்னர்மன்னர் மன்னுந்திருநகரம்
யானைகட்டிவாழுமுடி அரசர்வாழ்வீதிகளும்
சேனைத்தலைவர்பலர் சேர்ந்திவாழ்வீதிகளும்
வேந்தர்க்குக்கோல்கொடுக்கும் வேளாளர்வீதிகளும்
சாந்துசவ்வாதுபன்னீர் தான்விற்போர்வீதிகளும்
ஜாதகந்தான்குறிக்குஞ் சாஸ்திரிமார்வீதிகளும்
கோலமணிவிளக்குங் குச்சிலியர்வீதிகளும்
வேலைப்பழிக்கும்விழி வேசியர்வாழ்வீதிகளும்
கோடிகுதிரையணி குறித்திருக்குஞ்சாலைகளும்
ஆடிவருங்குதிரை அணிந்திருக்குஞ்சாலைகளும்
கடையுங்கடைத்தெருவுங் கனமானமாடங்களும்
கோடைதருஞ்செம்பொன் கொட்டிவைத்தகூடங்களும்
வீதிக்குவீதி விளங்குஞ்சிவாலயமும்
நீதிவழுவாத நெறிமன்னராலயமும்
மன்னர்க்குநன்மதிசொல் மந்திரிமார்மாளிகையும்
அன்னங்கொடையளிக்கும் அழகானமாளிகையும்
எழுநிலைமாடங்களு மெழிலானகூடங்களும்
தாழுமகழிகளுந் தங்கத்தாற்கோட்டைகளும்

போர்வீரரெப்புறமும் புடைசூழுங்காவல்களும்
தேர்வீரர்வாள்வீரர் திக்கெட்டுங்காவல்களும்
வாளுறையில்வையாத வலுவீரர்காவல்களும்
தோள்கொட்டிதட்டிநிற்குந் துடிசூரர்காவல்களும்
கற்பில்வழுவாத கன்னியர்கூட்டங்களும்
அன்பிற்குறையாத அடியார்கள்கூட்டங்களும்
சன்மார்க்கர் நீங்காத சற்குணர்கள்கூட்டங்களும்
துன்மார்க்கமில்லாத துரைமக்கள்கூட்டங்களும்
பந்துமுலைமாதர்பலர் பந்தடிக்குமேடைகளும்
இந்துநுதற்பெண்கூடி இளைப்பாறுமேடைகளும்
கல்விபயிலுங் கனமானசங்கங்களும்
செல்வர்மகிழ்ந்து செருக்குறு நற்சங்கங்களும்
மூலைக்குமூலை முத்துகளஞ்சியமும்
சாலைக்குச்சாலை தங்கக்களஞ்சியமும்
வீடுகளெங்கும் விளங்குந்திருமணமும்
நாடுஞ்சிறுவர்கட்கு நல்லதிருமணமும்
மாணிக்கத்தாலிழைத்த மன்னர்மணிமண்டபமும்
ஆணிப்பொன்னலமைத்த ஆஸ்தானமண்டபமும்
செண்டுமுலையாராடுந் தெய்வத்திருச்சபையும்
வண்டுவிழியாராடு மன்னர்திருச்சபையும்
அன்னமயிலாடு அழகானஇல்லங்களும்
வன்னக்கிளிகள்கொஞ்சும் வாகானஇல்லங்களும்
போர்த்தொழிற்கற்கமன்னர் புரிந்திட்டநல்லிடமும்
எல்லாவளமும் இசைந்ததிருக்காசிநகர்
வல்லாண்மைமன்னர்பலர் வந்துபணியும்நகர்
இந்தத்திருநகர் என்றும்வரன்முறையாய்த்
தன்னந்தனியே தனிச்செங்கோல்தான்செலுத்தும்
மன்னுப்பொறுமையாலே வண்பூமிக்கொப்பானோன்
கன்னல்விளமாறனைப்போற் கட்டழகுதானுடையோன்
சொன்னமொழிதவருன் சொல்லில் அரிச்சந்திரன்ருன்
கர்னன்கொடைமாறக் கனகமளித்திடுவோன்
வன்னியவன்பேரில் வள்ளிமணவாளனெப்பான்
சொல்லுமனுநீதியிலே தூயதசராஜனையான்
தொல்லுலகையாளும் துளசிமகாராஜன்
மங்காதுநீதிநெறி மானிலத்தையோர்குடைக்கீழ்
செங்கோல்செலுத்தி ஜெயம்பெற்றுவாழ்நாளில்



அரசிருக்கை

சொல்லமைச்சர்சூழ்ந்துவரத் துளசிமகாராஜன்
வல்லமுடிதரித்து மனுசெங்கோல்கைபிடித்து
ஆலவட்டஞ்சாமரைகள் அணியணியாய்வீசிவர
கோலமுள்ளமாதர் நிறை கும்பமெடுத்துவர
ஆலாத்திதீப மரிவைமாதர்தாங்கிவர
சீலமறையோர்கள் செயவாழ்த்துகூறிவர
கன்னியர்களாடிவரக் கணிகைமார்பாடிவர
மன்னர்படைநெருங்க மற்றுமுள்ளோர்தான்நெருங்க
வட்டக்குடைபிடிக்க வாள்வீரர்கைபிடிக்க
பட்டுக்கொடிபிடிக்க பலவிருதுதான்பிடிக்க
பற்பலவாத்தியங்கள் பறவைபோற்சத்தமிட
சொற்புலவோர் நாற்கவியுஞ் சொல்லித்துதித்து நிற்க
சின்னங்களெல்லாஞ் சிறப்பாய்பிடித்து நிற்க
மன்னியநாற்சேனை வகைவகையாய்ச்சூழ்ந்து நிற்க
அட்டசிங்கந்தாங்கு மாஸ்தானமண்டபத்தில்
பட்டமன்னரோடு பண்பாய்க்கொலுவிருந்தான்
மண்டலத்தைதான்மதிக்கும் மன்னன்மணிமுடி தான்
கடலெல்லாந்தான்மதிக்குங் காதலன்றன் கணையாழி
வாகுவலயமுந்தான் வானுலகைத்தான்மதிக்கும்
சேகுவயிரமணி செகத்தைவிலைமதிக்கும்
மார்பிற்பதக்கநிறை மதியொளியைமாற்றிவிடும்
சோர்விலொளிபணிகள் சூரியனைத்தோற்கடிக்கும்
இந்தவகைப்பணிக ளிட்டிருக்குமன்னவன்முன்
பந்தமொடுதேசமன்னர் பகுதிகொடுத்து நிற்க
கட்டியர்களெச்சரிக்கை கைகட்டிக்கூறி நிற்க
நட்டுவர்பின்மாதர்பலர் நாட்டியங்கள்செய்து நிற்க
வெள்ளைத்தடிகாரர் விதவிதமாய்வந்து நிற்க
துள்ளும்படைவீரர் துடிப்புடனேவந்து நிற்க
சேனைத்தலைவரெல்லாந் திறமுடனேசேர்ந்து நிற்க
யானைத்தலைவரெல்லாம் அஞ்சலொடுசேர்ந்து நிற்க
தையலர்கள்சங்கீதந் தான்பாடிமுன்பு நிற்க
மங்களவாழ்த்துநிறை மங்கிலியர்வாழ்த்தி நிற்க
சங்கையில்லாமல்பொன் தானங்கொடுத்து நிற்க

எங்கள் அரசனுர் இருக்குமந்தவேளையிலே
பொங்கமுடனவ்வரசன் புத்திரனில்லாமையினுல்
வேதாந்தவேதியரை வேதப்பிராமணரை
சாதகரைமற்றுமுள்ள சாஸ்திரத்தில்வல்லவரை
பார்த்தேயொருவார்த்தை பார்த்திபர்சொல்லலுற்ருர்
கீர்த்திபெற்றவிற்பனரே கேள்வியினில்வல்லவரே
அறுபத்துநான்குகலை யாவுமுணர்ந்தவரே
மறுவில்லாஎன்குடிக்கு மைந்தனில்லாமையினுல்
சிந்தைதளர்ந்து திகில்கொண்டேன்பலநாளும்
எந்தவழியும்பிள்ளை இசைக்கவழிசொல்வீரென்று
பூதலமாளுங்காசிப் பூபாலன்சொன்னவுடன்
வேதப்பிராமணர் விற்பனர்கள்சொல்லலுற்ருர்
அட்டதிக்காளும் அரசர்சிரோன்மணியே
பட்டந்தனக்குப்பிள்ளை பண்பாகவேண்டுமென்ருல்
காசிநதியாடிக் கருதுமுக்காலையிலும்
ஈசன்விசுவாசநாத னெழிலானசன்னதிக்குள்
சென்றுஅபிஷேகமுதல் செய்வித்துப்பின்சிவனே
என்றுவணங்கியார்க்கு மெண்ணுன்குதர்மஞ்செய்யில்
அவனியிலொருகுடைக்கீ ழாளமகன்பிறப்பான்
சிவனருளாலேயுமக்குச் செல்வன்பிறக்குமென்ருர்
சாஸ்திரிமார்கள்சொன்ன சன்மார்க்கச்சொற்கேட்ட
மாத்திரந்தீர்த்தமாட மன்னனெழுந்திருந்தான்

தீர்த்த மகிமை

கன்மவினைகளெல்லாம் கட்டறுக்கும்காசிநதி
தருமஞ்செய்வோர்க்குமுத்தி தானளிக்குங்காசிநதி
பிள்ளையில்லாதவர்சூழ்கிற் பிறப்பிக்குங்காசிநதி
அரிக்குமொருபதவி அளித்திட்டகாசிநதி
அந்தவிசனத்தோடு மளவில்சனத்தோடும்
வந்துநற்கங்கைதனில் மனைவிகரம்பிடித்து
சிந்தைமகிழ்ந்துதிவ்ய தீர்த்தத்திலாடியபின்
பல்லாயிரங்கோடி பார்ப்பார்களுக்குதானஞ்செய்ய
இல்லோர்பல்லோர்க்குத்தான் ஏகமாய்ச்செய்தபின்பு
காசிவிசுவநாதர் கனகோபுரங்கள்கண்டு
ஆசையுடன்வணங்கி அக்கோயில்நாடிமன்னன்
மன்னர்புடைசூழ மந்திரிமார்தான்சூழ

சந்நிதிவீதியிலே தார்வேந்தன்வந்தபின்பு
அண்டத்தளாவும்பல வானபொற்கோபுரமும்
எண்டிசையுங்காண இலங்குந்திருமதிலும்
சொர்க்கத்தளாவிநிற்கும் துவசமணிஸ்தப்பங்களும்
கற்களிழைத்திலங்கும் கனமானஸ்தூபிகளும்
எங்குஞ்சிவாலயமு மெழிலானலிங்கங்களும்
தங்கத்தாற்போட்டிருக்கும் தளவரிசைசித்திரமும்
மூலைக்குமூலை முத்தால்விளக்குகளும்
சாலைக்குச்சாலை தங்கவிளக்குகளும்
தேர்விள்க்குஞ்சீர்விளக்குந் திருவாட்சிநல்விளக்கும்
பார்விளக்குகோபுரத்திற் பதித்தவிளக்குகளும்
சொல்லுநவமணிகள் ஜொலிக்கும்விளக்குகளும்
இல்லாவிளக்குமிந்த யீரேழுலகிலில்லை
அல்லும்பகலும் அலுத்தெரியுஞ்சந்நிதியில்
வாழுமறையவர்கள் வரிசைஎடுத்துப்பலர்
சூழும்படிஅரசன் சமுகம்வந்துமேவாழ்த்தி
அந்தமறையோர்கள் அரசனைக்கோயிலுள்ளே
சிந்தைமகிழ்ந்துதவஞ் செய்யச்சிவலிங்கமுன்னே
கொண்டுவிடுத்தபின்னர் கொற்றவனுங்கைகுவித்து
தொண்டுபுரிந்துசிவன் துங்கவடிதொழுதான்

மூர்த்தி மகிமை

கண்டார்தமக்குமுத்தி களித்தருளுங்காசிநதி
தொண்டுபுரிந்தோர்க்கு சொர்க்கங்கொடுக்கும்லிங்கம்
க்ஷேத்திரத்திற்சேர்ந்தோர்க்கு சிவலோகமீயும்லிங்கம்
தோத்தரித்தபேர்க்கு சூழ்வினை நீக்குலிங்கம்
வேண்டும்வரங்களெல்லாம் விரும்பிக்கொடுத்தலிங்கம்
ஆண்டும்பிறவாத்தன்மை யார்க்குங்கொடுத்தலிங்கம்
எந்தத்தலத்து மிணையில்லாப்படிகலிங்கம்
இந்தத்தலத்துமேன்மை எய்தும்விசுவலிங்கம்
தன்னைப்பணிந்தரசன் தாழ்ந்து அடிவணங்கி
எந்தனுக்குப்பிள்ளை ஈய்ந்தருள்செய்யுமென்று
பூஜைநைவேத்தியங்கள் புரிவித்துநல்லிசைகள்
ஆசையுடன்பாடி ஆனந்தக்கூத்தாடி
காவலராண்மனைக்குள் காவலனும்போய்ப்புகுந்து
ஆவலுடனே அன்னம் அருந்திக்கொலுவிருந்து

அரசன் முப்பத்திரண்டு அறமுஞ் செய்தல்

மந்திரிமார்களைத்தான் வகைவகையாய்வரவழைத்து
தந்திரிமார்களை தந்திரமாய்வரவழைத்து
வேதியர்கள்சொன்ன விதிப்படிக்குதர்மஞ்செய்ய
நீதிமன்னர்பக்கலிலே நின்றவரைப்பார்த்துரைப்பான்
அடிக்கடிக்குநன்மைசொல் லமைச்சர்களேகேளுங்கள்
படிக்குள்விளங்குகின்ற பலமானதானமெல்லாம்
எண்பெயராலட்டதிக்கு மெழில்பெறவேசெய்வீரென
நன்மதிசேர்மந்திரிமார் நராதிபனுர்சொற்கேட்டு
திக்குக்குதிக்கு திரளானசமுத்திரம்
தொக்கவுலகமெங்குஞ் சொல்லரியவாவிகளும்
மண்டலமெங்கும் வகைவகையாய்க்கோயில்களும்
கண்டங்களொன்பதிலுங் கனத்தமடந்தடமும்
கட்டுவித்தார்காசிநகர் காவலன்றன்சொற்படிக்கு
பட்டத்தரசரெல்லாம் பார்த்துமனமகிழ
கோடிப்பிராமணர்க்கு கொடுத்தான்செம்பொன்கோடி
தேடிப்பலதருமஞ் செய்துவிட்டான்தேர்விஜயன்
கன்னிகாதானங் கணக்கில்வெகுகோடி
அன்னமிடுதான மளவில்பலகோடி
பூதானம்வேதியர்க்குப் போற்றும்பலகோடி
கோதானமந்தணர்க்கு கொடுத்தான்பலகோடி
நீர்ப்பந்தல்பூமியெங்கும் நிகரில்பலகோடி
மோர்ப்பந்தலம்புவியில் மொழியிற்பலகோடி
அறவைப்பிணஞ்சுடுத லதுவும்பலகோடி
பறவைச்சிறைவிடுதல் பாரிற்பலகோடி
கண்ணுடிகாதோலை கண்மருந்துபெண்போகம்
வண்ணுனெடுசுன்ன மயிரின்சிறைகளைதல்
விலங்கிற்குணவு விலைகொடுத்தேயுயிர்காத்தல்
துலங்குமகப்பால்கொடுத்தல் சோலைசிறைசோறிடுதல்
தின்பண்டநல்கல் சேய்வளரத்தயிலமிடல்
வன்கல்வியோர்க்குணவு வாய்த்தபசுவிற்குப்புல்
இந்தவகைத்தரும மிறைவன்கொடுத்தபின்பு
அந்தமுடன்சிவனை அரசன்மனைவியோடும்
சந்ததமுங்காசியில்வாழ் சங்கரனைத்தானேக்கிச்
சிந்தைமகிழ்ந்து செய்தார்பலவிரதம்

அந்தவகையறிந்தே ஆதிசிவனன்போடும்
சந்தானங்காசிமன்னன்தன் மனைவிக்கேகொடுத்தார்

மதுரைவீரசுவாமி உற்பத்தி

மேகந்தனைப்பழிக்கும் மெல்லியநற்கூந்தலினால்
தோகைமயிலைப்பழிக்குஞ் சொல்லரியசாயலினால்
சந்திரனுங்கண்டு தயங்குந்திருமுகத்தாள்
இந்திருக்கொப்பாக விளங்குமழகுடையாள்
அன்னந்தனைப்பழிக்கும் அசைந்ததிருநடையாள்
மின்னலினைப்பழிக்கும் மேகலைப்பூணுடையாள்
பம்பரத்தைத்தான்பழிக்கும் பணைத்தவிலைமுலையாள்
செம்பொற்சரிகை சிறக்குமெழிற்கலையாள்
அம்புவிமேலே யார்ந்தபுருவச்சிலையாள்
கம்பவாழைத்தொடையாள் கற்புமிகுநிலையாள்
துளசிமகாராஜனுக்குச் சொல்லுமுயிர்த்துணையாள்
வளமிகுந்தகற்பூர வல்லிதிருவயிற்றில்
கங்கையணிசிவனருளால் கருதிரண்டகாலையிலே
மங்கைக்காசி மதிமயக்கமானாள்காண்
மூன்றான திங்களிலே முலைகறுத்துமுகம்வெளுத்தாள்
தோன்றுமயக்கமிகத் தோற்றமுறவாடிநின்றாள்
நான்கான திங்களிலே நன்மசக்கைகொண்டாள்காண்
தேன்கதலிமாவருக்கை தித்திப்பிலிச்சைகொண்டாள்
ஐந்தான திங்களிலே பைம்பொன்போல்மேனிகொண்
சிந்தாகுலமிகுத்துச் சிந்தைமிகத்தளர்ந்தாள் [டாள்
ஆறான திங்களிலே அடிவயிறுதான்தளர்ந்தாள்
வீறானவேழுதிங்கள் மெல்லியிடைசிறுத்தாள்
எட்டான திங்களிலே எண்ணுதுளண்ணி நின்றாள்
ஒட்டுமொன்பான் திங்களிலே யுறக்கமிகவிடுத்தாள்
பத்தான திங்களிலே பாலகனைப்பெற்றெடுத்தாள்
முத்தானவாய்திறந்து முதல்மகனுந்தானழுதான்
ஆயிரங்கோடி அழகுள்ளசூரியன்போல்
மாயிருஞாலத்தில் வாய்க்காதரத்தினம்போல்
தங்கத்தைக்காய்ச்சித் தரையில்கவிழ்த்ததுபோல்
ஒருகோடிசூரியரை உருக்கிக்கவிழ்த்ததுபோல்
இருகோடிசந்திரரை எடுத்துக்கவிழ்த்ததுபோல்
கோடிமன்மதனுருக் கொண்டுதிரண்டதுபோல்

நீடியபூமியிலே நிருபன்பிறந்தவுடன்
தேவாதிதேவரெல்லாம் தேன்மாரிதான்பொழிந்தார்
பூவுலகமெல்லாம் பூமாரிதான்பொழிந்தார்
அந்தரதுந்துமிகள் ஐந்துமுழக்கிவிட்டார்
இந்திரன்வானவர்க ளெல்லாரும்வாழ்த்தலுற்றார்
மண்டலத்திலுள்ளவர்கள் மங்கலவாழ்த்துரைத்தார்[ர்
விண்டலத்திலுள்ளவர்கள்விதவிதமாய்வாழ்த்திநின்று
பாலகனைப்பாரிலுள்ளோர் பலரும்வந்துபார்த்தார்கள்
கொடிசுற்றிதான்பிறந்த குழந்தைதனைப்பார்த்தார்கள்
துடியிடையார்தோழிமார் துரிதமுடனோடிவந்து
தொல்லுலகையாண்டுவரும் துளசிமகாராஜன்முன்பு
வல்லகரங்குவித்து வாழியென்றுவாழ்த்தலுற்றா
எங்கள்குலதெய்வமே இறைவனே நீர்கேளீர்
மங்காதசெல்வமுள்ள மன்னவரே நீர்கேளீர்
திக்கெல்லாம்ஆளவொரு செல்வனார்தாம்பிறந்தார்
மிக்கவடிவுடைய வேந்தனார்தாம்பிறந்தார்
பிள்ளைகலிதீர்க்க பேரரசர்தான்பிறந்தார்
வள்ளலேயிவ்வடிவாய் மாநிலத்தில்தான்பிறந்தார்
மாதர்தமைமயக்கும் மன்மதனார்தான்பிறந்தார்
காதல்மிகவளிக்கும் கட்டழகர்தான்பிறந்தார்
பிறந்ததிலேயாதும் பிசகில்லைஎம்மரசே
சிறந்தமகன்பிறப்பிற் றீங்கொன்றுண்டெம்மரசே
மாலைசுற்றித்தான்பிறந்தால் மாமனுக்காகாதென்பார்
சாலப்பெருங்குற்றந் தரணியோர்சொல்வார்கள்
கொடிசுற்றித்தான்பிறந்தால் குலத்துக்காகாதென்பார்
வடிவுபெறுமதற்கு மற்றக்குறைவில்லையே [ன்
என்றுஅந்தத்தாதியர்கள் வேந்தனுக்குச்சொன்னவுட
குன்றனையதோள்நிமிர்ந்து கொற்றவனார்தான்மகிழ்ந்
பிள்ளைபிறந்ததென்று பேரரசர்தான்களித்தார் [தார்
கொள்ளைகொடுத்தார் குறைவிலாக்களஞ்சியங்கள்
சீனிச்சருக்கரையை திக்கெட்டும்வழங்கவிட்டார்
மாநிலத்தில்பின்னே மனமகிழ்வாய்ப்பிரித்துவிட்டார்
அந்தப்புரத்தில் அரசரெழுந்தருளி
சந்தமுள்ளதாதியரை தானழைத்துதன்மகனை
எடுத்துவரவே இறைவர்திருவாக்களித்தார்
அடுத்திருந்ததாதியர்க ளப்பொழுதேகொண்டுவந்து

மன்னவர்முன்பாக வைத்தார்பூந்தொட்டிலுள்ளே
சின்னக்குழந்தை திருமுகத்தைத்தான்பார்த்து
என்றுமடையாத வெக்களிப்புதானடைந்து
நின்றுமகிழ்ந்து நெடுநேரந்தான்பார்த்து
கொண்டுபோமென்று கொலுவிலரசன்வந்து
மண்டலத்தையாளும்வல்ல மந்திரியைத்தானழைத்து
சோதிடத்தில்வல்லவரை சுருக்கிலழையுமென்றார்
நீதிதவரூவமைச்ச னிருபனார்சொற்படிக்கு
சோதிடரைத்தானழைத்தான் சோதிடருமோடிவந்து
ஆசியுரைத்துமஞ்ச ளட்சதைவேந்தர்க்களித்தார்
மன்னன்மணியாசனத்தை மறையோர்க்குத்தான்கொடு
என்னையழைத்தவித மென்னென்றார்சோதிடரும் [தார்
அந்தமொழிகேட்டே அரசன்விளம்பலுற்றான்
வெள்ளிக்கிழமைதனில் விடிந்துபத்துநாழிகையில்
வள்ளல்கழுத்திலே மாலைசுற்றித்தான்பிறந்தான்
ததிகரணம்வாரஞ் சிறந்தயோகமிவைநாள்
திதியறிந்துபஞ்சாங்கஞ் சாஸ்திரத்தைப்பாருமென்றார்
அப்படியேசோதிடநூ லந்தணர்தான்பார்த்து
செப்பருநாளுதிங்கள் திதிவாரந்தீங்கெனவே
சோதித்தறிந்தபின்பு துளசிமகாராஜனும்
பேதிக்கச்சோதிடரும் பேசத்தொடங்கலுற்றார்
திக்கெட்டுங்கீர்த்தி செலுத்தும்செங்கோல்வேந்தே
தக்கதவம்புரிந்து தான்பெற்றபிள்ளையது
ஜனனமெடுத்ததினம் தரணிக்கேயாகாது
கனமானபொல்லாங்கு காசிநகர்க்கெய்துவிடும்
நாளுங்கோளும்பிறந்த நாட்டுக்கேயாகாது
மீளும்பெரும்போரு மிகச்சிறியபிள்ளையினால்
குழந்தையைவைத்திருந்தால் கோத்திரத்திற்காகாது
இழந்திடுவீர்நாடுநகர் இக்குழந்தைதன்னாலே
அருமகனைவைத்திருந்தா லரண்மனைகள்வெந்துவிடும்
திருமகனைவைத்திருந்தால் தேசமெல்லாம்வெந்துவிடு
என்றுமிகவுரைத்தார் எழிலானசோதிடரும் [ம்
குன்றிவயிறெரிந்து கோபமிகக்கொண்டரசன்
அந்தமொழிகேட்டே அடித்தலறித்தான்விழுந்தார்
சிந்தைதளர்ந்து தியங்கிமதிமயங்கி
அப்பாமகனேயென் றபயமிட்டுத்தான்புலம்பி

எப்படி என்செய்வேன் இனிபிழைக்கேனென்றுசொல்லி
துங்கவுலகாளுந் துளசிமகாராஜர்
அங்கம்வியர்த்தே அவனிதனிற்புரண்டு
வாயிலேமண்ணை வாரியடித்தார்காண்
கோயிலில்தெய்வமெல்லாங்குறித்துமிகவைத்தார்காண்
பேச்சுமூச்சில்லாமல் பிணம்போலுமானூர்காண்
பூச்சக்கிரமாளும் புகழ்காசிமன்னவனூர்
மந்திரிமார்களெல்லாம் மனதுமிகக்கலங்கி
அந்தவரசன் அருகினிற்சென்றுஎழுந்து
சுக்குப்பொடிகாதிற் சொரிந்துவாயாலூதி
திக்காளும்மன்னவரைத் தெளிந்துவிடச்செய்தார்கள்
சோகமதுதீர்ந்து துளசிமகாராஜர்
தாகந்தெளிந்துமவர் தனியேஎழுந்திருந்து
கோடிதருமஞ்செய்துங் கொடும்பாவியானேனென்றூர்
நாடித்தவம்புரிந்து நான்பாவியானேனென்றூர்
முற்பிறப்பிற்செய்தவினை மூண்டதென்றூரிப்பிறப்பில்
நற்பிள்ளைதன்னையினி நான்செய்வதென்னவென்றூர்
வந்திருந்தசோதிடர்கள் மன்னவரைத்தான்பார்த்து
இந்தமகனையினி இங்குவைக்கலாகாது
எந்தவிதமும்பிறர்க் கீந்திடுதலுத்தமமாம்
அந்தவிதமன்றிக் காட்டகத்தில்விடல்மத்திபமாம்
என்றுமுறையே எடுத்துரைத்தாரிவ்வசனத்தை
குன்றனையதோள்வேந்தர் கோவென்றழுதுவிம்மி
ஐயையோதெய்வமே அடாதமொழிகேட்டேன்
உய்யும்வகையறியேன் ஓகோகோவென்னசெய்வேன்
இந்தபிள்ளையைகொடுக்க எவர்க்கும்மனந்துணியாதே
பிறந்தபிள்ளையைக்கொடுக்க பேருலகிற்றுணிவாரோ
உயிரோடுபிள்ளைதனை ஓட்டிவிடவெண்ணுவரோ
ஆனாலும்பாவியென்போல் அம்புவியிற்கண்டிலனே
தேனூரிதழ்முடிச் சிவனூர்செயலிதுவோ
வேதன்விதித்த விதியின்பயனிதுவோ
ஏதுமறியேனென்று இறைவன்மனந்துணிந்தார்

மதுரைவீரனை வனத்தில் விடச்சொன்னது

தூதுவரைவிட்டரசர் தோழிகளைவரவழைத்து
மாதுகற்பூரவல்லி மைந்தனைப்பொன்தட்டில்வைத்து

மேதினியோர்காணுமல் மிகவிருண்டகாட்டினுள்ளே
காதலுறுமகனைக் கைக்கொண்டுபோய்விடுத்து
வாருங்களென்றுசொல்லி மன்னரவர்வாக்களித்தார்
காகம்வெருண்டோடுங் கருங்கூந்தற்றேழியர்கள்
அந்தமொழிகேட்டே அந்தப்புரஞ்சேர்ந்து
கன்னிகற்பூரவல்லி கடிவாசலுட்புகுந்து
கண்ணீர்ததும்பிடவே காயம்நடுங்கிடவே
வண்ணமுகஞ்சோர்ந்து வாடிமிகவழுது
செல்வன்பிறந்ததினம் தேசத்துக்காகாதென்று
வல்வேந்தர்உம்மகனை வனத்தில்விடவாக்களித்தார்
எங்கட்கரசியரே நாங்களென்னசெய்வோமம்மா
செங்கோலாசரது சித்தமறியோமம்மா
என்றந்தத்தாதியர்களியம்புமுறைகேட்டு
குன்றினையொத்தஸ்தனத்தாள் கூக்குரலிட்டேயழுது
கண்ணிலறைந்துகொண்டாள் கையைமுறித்துநின்ரு
மண்ணில்விழுந்தழுதாள் மார்பிலடித்தழுதாள் [ள்
கூந்தல்விரித்தரசி கூச்சலிட்டுத்தானழுதாள்
ஏந்திழைமார்களேயான் என்னசெய்வேனென்றழுது
மைந்தன்றனையிழந்த மாபாவிஎன்பாரே
அழகுமகனில்லாத அரும்பாவிஎன்பாரே
காட்டில்மகனைவிட்ட கடும்பாவிஎன்பாரே
நாட்டில்பலபேர் நகைத்திகழ்ந்துசொல்வாரே
என்னசெய்வேன்சிவனேஎன்று ஏங்கிமிகத்துடித்து
தன்விதியைத்தானினைந்து சலித்துமனம்நொந்து
முட்டியழுதாள் மகன்முகம்பார்த்தழுதாள்
கட்டியெடுத்துமகன் கண்முகத்தைப்பார்த்தழுதாள்
அப்பாமகனேஎன் அருமைத்திருமகனே
இப்பாரையாளவந்த எங்கள்குலக்கொழுந்தே
தேடக்கிடையாத செழுந்தேனேதெள்ளமுதே
நாடாளவந்தயெங்கள் நாயகமேநற்றிருவே
தவமாதவமிருந்து தான்பிறந்தரத்தினமே
அவமாகக்காட்டில்விட அரசர்மனங்கொண்டாரே
மாபாவிஎன்வயிற்றில் வந்துதித்தபாக்கியமே
பூபாலருனைவனத்தில் போக்கிவிடச்சொன்னுரே
[illegible]ந்தவிதிக்கோ நீ என்வயிற்றில்வந்துதித்தாய்
அந்தப்பிரமனுனக்கு அமைத்தவிதியிதுவோ



3 மதுரைவீரனை வனத்தில் விடச்சொன்னது

பிள்ளையில்லையென்று பெருந்தவசு நான்புரிந்தேன்
வள்ளலில்லையென்றுபல வகைவிரதம்நான்புரிந்தேன்
ஐயோ திருவுளமே ஆதிசிவனேயென்று
கையைநெரித்து கதறிசலித்திளைத்தாள்
பக்கத்திலே நின்றிருந்த பாங்கிமார்தானெடுத்து
மிக்கத்துயர் நீங்க மெல்லியரைத்தேற்றுவித்தார்
பட்டணத்துமன்னர் பலராஜர்மந்திரிகள்
திட்டமுள்ளசேவகர்கள் சேனைத்தலைவர்மற்றோர்
கற்பூரவல்லி கடிமனையினுட்புகுந்தார்
துளசிமகாராஜர் துயரமிகவடைந்து
தளராதேயென்றந்த தையலரைத்தேற்றுவித்து
மன்னன்மனைவியரும் மண்ணுருகத்தானழவே
அன்னை துயர்கண்டு அனைவோருமேயழுதார்
பட்டணத்திலுள்ளவர்கள் பார்த்துமிகவழுதார்
அட்டதிக்குமன்னர் அழுதுமிகச்சூழ்ந்துவர
அப்போதுதங்கத்தினு லமைந்திலங்குந்தட்டினுள்ளே
இப்போதுபாலகனை எடுத்துவளர்த்துமென்று
பாங்கியர்க்குபார்வேந்தன் பகர்ந்திட்டானப்பொழுது
தாங்கினாம்மகனை தாதியர்பொற்றட்டதனில்
வைத்துத்துளசி மகாராஜர்முன்புவந்தார்
இத்ததியேதூதுவரே எடுத்துமுத்துத்தண்டிகையை
கொண்டுவாச்சொன்னவுடன் கொண்டுவந்தார்பொற்சி
மண்டலமாளும் மகுடமன்னரக்கணமே [விகை
மன்னுமுத்துதண்டிகையில் மைந்தனைஏற்றுவித்து
இந்தக்குழந்தைதன்னை எல்லோரும்கொண்டேகி
காட்டில்விட்டுவாருமென்று கட்டளையிட்டானரசன்
கேட்டவர்கள்செங்கோலின் கீழ்ப்படிந்துபோகலுற்றார்
முத்துச்சிவிகையைச்சூழ் முடிமன்னர்முக்கோடி
யானையொருகோடி அணித்தேரிருகோடி
சேனைபலகோடி ஜெயவீரரெண்கோடி
ஆட்டமும்பாடல்களும் அதிர்வேட்டுக்கோஷ்டமுட
கூட்டமுடன்மகனைக் கொண்டுநடக்கலுற்றார் [ன்
காசிநகரைவிட்டு கடுகவெளியில்வந்தார்
தேசிகுலமன்னர்வாழ் சிறப்பானவீதிவிட்டு
யானைவிலைமதிக்கும் மறுமன்னர்கள்வீதிவிட்டு
சேனைத்தலைவர்வாழும் சிங்காரவீதிவிட்டு

குதிரைவிலைமதிக்கும் குச்சிலியர்வீதிவிட்டு
சதுரில்நடனமிடுந் தாசியர்கள்வீதிவிட்டு
போட்டசட்டைவாங்காத பொந்திலியர்வீதிவிட்டு
கொட்டிப்பலதொழில்செய் கொல்லர்வாழ்வீதிவிட்டு
காசிநகரைவிட்டு கானகத்திற்போய்ப்புகுந்து
தேசமன்னரெல்லவரும் சிறந்தவனம்புகுந்து
காரைபடர்ந்தவனம் கருங்களாப்பூர்க்கும்வனம்
சூரைபடர்ந்தவனம் சுண்டைக்காய்காய்க்கும்வனம்
குன்றுமலைகளிலே கொடும்புலிகள்சூழும்வனம்
ஆறுமடுவுகளும் அழகாய்நிறைந்தவனம்
கூவும்பெருமிருகம் குலாவியிருக்கும்வனம்
சிங்கங்கரடி செந்நாய்நெருங்குவனம்
எங்கும்விஷப்பாம்பு இருந்துகுலாவுவனம்
இன்னம்பலமிருக மிருக்கும்வனந்தனிலே
மன்னுமகனைமூத்து வண்சிவிகையோடிறக்கி
திட்டமுள்ளபுல்லிடத்தை தெரிந்துமவர்பார்த்து
தட்டோடுபாலகனை தாழவேதானெடுத்து
மண்ணில்வைத்தபாலன்றன் மதிமுகத்தைப்பார்த்தழு
கண்ணீர்சொரிந்தார்கள் கதறியழுதார்கள் [தார்
திரண்டுவந்தசேனைகள் திகிலடைந்துதானழுதார்
இருண்டவனந்தனிலே எல்லோருந்தாமழுதார்
காட்டைவிட்டுநாட்டிற்கு கடுகநடந்தார்கள்
மலைகள்குகைநடந்து வந்தார்கள்பட்டணத்தில்
கோட்டையிற்செல்லுதற்குக் குறுகிநடந்தார்கள்
உலகாளுமன்னவர்க்கே உத்தாரஞ்சொன்னார்கள்
அவரவர்வாழிடத்தி லன்பாயிருந்தார்கள்
நகையில்லாப்பாலனுக்கு நடக்கின்றவாறுசொல்வேன்

மதுரைவீரனுக்கு நாகம் உதவிசெய்தது

பாலகனுமப்போது பாரவனந்தனிலே
ஓலமிட்டுத்தானலறி ஓங்கியழுகையிலே
மாமரத்திநிழலிலே மைந்தன்தனித்திருந்து
தாமரைநீர்போலத் தயங்கியழும்அழுகைகண்டு
மாணிக்கநாகமது மனமதுமிகவுருகி
ஆணிப்பொன்போல்விளங்கு மரசமைந்தன்பக்கலிலே
வந்துபடம்விரித்து மதிமுகத்தைத்தான்பார்த்து
அந்தக்குழந்தைக்கு அரியமுத்தந்தான்கொடுத்து

புத்தியும்யோகமும் பொருந்தியிருப்பதற்கு
நாக்கில்சரஸ்வதிதான் நன்ருகத்தான்விளங்க
முகத்தில்திருவழகு முன்னின்றுதான்விளங்க
எதிர்த்தவரைவெல்ல ஏமனது அட்சரமும்
நீச்சனில்லாவீட்டில் நிச்சயமாய்த்தான்பார்த்து
அலங்காரவீரனென்று ஆனதொருபேரும்வைத்து
மன்னர்களைவெல்ல மந்திரவாள்கைகொடுத்து
வீரப்பனென்றுசொல்லி விதமாய்மதுரையிலே
பூஜைபலிகொடுத்துப் போற்றித்துதித்திடவே
இந்தப்புவியோரை என்னென்றுகாத்திடவே
மீனுட்சிகம்பத்தடி விளங்கவே நீயிருப்பாய்
முன்பூஜைகொண்டு முப்பூஜைதான்பெறுவாய்
பத்துவயதினிலே படைமுகமும்வென்றிடுவாய்
கள்ளரைவென்று கனமதுரையாண்டிடுவாய்
பெண்களினுலே பெரும்பதத்தைச்சேர்ந்திடுவாய்
என்றுமேசொல்லி இனிதாகத்தான்வாழ்த்தி
தேவாமிர்தத்தை தினந்தோறும்தான்புகட்டி
இப்படியாக இருக்குமந்தவேளையிலே

மதுரைவீரனை சக்கிலிச்சி கண்டெடுக்கிறது

காசிநகரைச்சேர்ந்த கனமரனகிராமத்தில்
பாலைவனந்தனிலே பாதரட்சைதைத்துவளர்
மாதிகச்சின்னுன் மனைவியாம்சக்கிலிச்சி
மைந்தனில்லையென்றுசொல்லி மதிமயங்கிதானிருந்து
பாதரட்சைதானம் பரிவாகத்தான்கொடுத்து
காசிவிஸ்வநாதனையும் கனகவிசாலாட்சியையும்
பூஜையனுஷ்டானம் புதியதவம்புரிந்து
மாதிகன்தேவியும் மன்னனுந்தரைமெழுகி
போஜனஞ்செய்து புண்ணியமிகச்செய்து
இப்படியாக இருக்குமந்தவேளையிலே
பாங்கானமாதிகனும் பாதரட்சைதைத்திடவே
வாறுகளும்சம்புகளும் வகையாகவூறவைக்க
ஆவாரப்பட்டைக்கு அன்புடனேபோவென்ருன்
நல்லதென்றுசொல்லி நலமுடனேமங்கையுமே
அசைந்துநடந்தாளே அந்தவனம்தானேக்கி
காசிநாடாளுமன்னன் கண்மணிக்குநேரான
பாலனிருக்குமந்த பாரவனம்நோக்கி

வழிகூடப்போகையிலே மங்கைநல்லாளப்போது
காணுதநற்சகுனங் கண்டாளேகண்களிக்க
காகம்வலமாச்சு காடையிடமாச்சு
மங்கிலியப்பெண்கள் வாழ்த்திவரக்கண்டாளே
தையநல்லாள்தானும் தண்ணீரைத்தான்கொண்டு
நிறைகுடங்கொண்டு நேராகத்தான்வரவே
கண்டுமனமகிழ்ந்து காரிகையுமப்போது
அசைந்துநடந்தாளே அன்னம்போலவ்வனத்தில்
காட்டில்புகுந்தாளே காரிகையுமப்போது
அரிவாருங்கைபிடித்து ஆவாரம்பட்டை வெட்டி
பட்டையைஎடுத்துக்கட்டி பயணமதாய்வருகையிலே
மாமரத்தின்கீழே மைந்தனைக்கண்டாளே
நாகத்தைப்போற்றிசெய்து நலமுடனேதெண்டனிட்டு
மன்மதனுக்கொப்பான வடிவுள்ளபாலகனை
கண்டுமனமகிழ்ந்து காரிகையுமப்போது
பிள்ளைகலிதீர்க்கவந்த பெருமையுள்ளமைந்தனென்று
வாரியெடுத்து மார்போடேதானணைக்க
பைங்கிளியாள்தன்னுடம்பு பசுமைநிறம்தானுச்சு
பாரஸ்தனங்களிலே பாலுஞ்சொரிந்திடவே
பாலகனும்பால்குடித்து பசியாறினபின்பு
கோலமயிலணையாள் குளிர்ந்துமனமகிழ்ந்து
பாலகனைமடியில்வைத்து பட்டையும்தானெடுத்து
வேர்த்துவிறுவிறுத்து வீட்டுக்குவாருள்காண்
இவள்வருவதற்குள்ளாக இந்நேரமென்னவென்று
சந்தேகம்தோன்றிச் சக்கிலியன்தானெழுந்து
கையில்தடியெடுத்துக் கனத்ததொருதோளில்வைத்து
பூமியதிர்ந்திடவே பொற்கொடியைத்தான்தேடி
கோபமிகக்கொண்டு கொம்பனையாள்முன்வந்து
கண்டானேபெண்ணணங்கை கண்கள்சிவந்திடவே
இந்நேரங்கானகத்தில் என்செய்தாயென்றுசொல்லி
சக்கிலியன்தானும் தடியெடுத்துநோக்கையிலே
அடியாதேஎன்கணவா அதிசயஞ்சொல்லுகிறேன்
கோபத்தைத்தானடக்குங் குணமுள்ளபர்த்தாவே
மைந்தனில்லாததினுல் மாதவங்கள்செய்தோமே
பிள்ளைகவலை பெருங்கவலைதீர்ந்ததிப்போ
ஆதிசிவன்கர்த்தன்நமக்கு ஆண்பிள்ளைகொடுத்தார்

மாணிக்கம்போலிந்த மைந்தன் தனையளித்தார்
இந்தாரும்பிள்ளையென்று ஏந்திழையாள் தான்கொடுத்
தட்டோடுபாலகனை தான்வாங்கிசக்கிலியன் [தாள்
இன்பக்கடல்குளித்து இருபுஜமும்பூரித்தாள்
வீட்டிலேதான்வந்து மெல்லியுடன்சின்னானும்
சக்கிலிச்சிகையில் தனையன்தனைக்கொடுத்து
தச்சனொருவனைப்போய் தானழைத்துவந்தான்காண்
மைந்தனுக்குத்தொட்டில் வளமுடனேசெய்யுமென்று
அப்படியேதச்சன் அமைத்தானேதொட்டிலுமே [ன்
மாணிக்கத்தைப்புதைத்து வச்சிரத்தால்பூண்கட்டி
பச்சைமரகதமும் பாங்குடனேதானமைத்து
தங்கக்கொலுசுசெய்து தான்பூட்டிதச்சனுமே
கொடுத்திடவேமாதிகனுங் கோதையருமேவாங்கி
பாலகனைத்தாமெடுத்துப் பதிவானதொட்டிலிலே [ள்
கண்மணியைத்தான்வளர்த்தி காரிகைதாலாட்டலுற்று

மதுரைவீரனுக்குத் தாலாட்டல்

ஆரிவரோ ஆரிவரோ ஆரிவரோ ஆரிவரோ

புத்திரனேயுந்தனுக்குப் புகழ்ச்சியுடன்தாலாட்ட
நித்திரைசெய்யுமந்த நேரானகண்மணியே ஆ
கண்ணேயுறங்குறங்கு கற்பகமேநித்திரைசெய்
கண்ணேஎன்கண்மணியே கற்கண்டேசர்க்கரையே ஆ
ஆதிசிவன்மகனே ஆயன்மருமகனே
சோதிக்கவந்தவனே துய்யகணபதியோ ஆ
தேனானகண்ணே தெவிட்டாததெள்ளமுதே
பாலூறும்வாயுடைய பாலகனேபைங்கிளியே ஆ
கானகத்தில்நீயும் கவிழ்ந்துவிளையாட
நானகத்தெடுத்துவந்த நாயகமேகண்வளராய் ஆ
எந்தனுக்குப்பிள்ளையென்று ஈஸ்வரனார்தந்தகண்ணே
சுந்தரமாய்நித்திரைசெய் சொர்னமயதொட்டிலிலே ஆ
பிள்ளைகவலை பெருங்கவலைதீர்க்கவந்த
வள்ளலேகண்ணே மணியேமணிவிளக்கே ஆ
மாறுபடாபாலகனே மாசிலாக்கண்மணியே
வேறுபடாபுத்தமுதே விண்மணியேகண்வளராய் ஆ
அங்கயற்கண்ணம்மை அருள்பெற்றபாலகனே
எங்கள்குடிதழைக்க என்மகனேகண்வளராய் ஆ

இப்படித்தாலாட்ட ஏத்தசிறுபாலகனும்
நித்திரையுஞ்செய்து நினைவுவந்துபாலகனும்
பசியெடுத்துப்பாலகனும் பதறியழுகையிலே
தாவியேசக்கிலிச்சி தானெடுத்துப்பால்கொடுத்தாள்
பால்கொடுத்துப்பசியாற்றி பாலகனுக்கப்பொழுது
எண்ணெய்தலையிலிட்டு இளம்வெந்நீர்தான்வார்த்து
உச்சியூதித்துடைத்து உடம்பெல்லாந்தான்துவட்டி
திட்டமுள்ளநெற்றியிலே திருநீறுகாப்புமிட்டு
நேரானநெற்றியிலே திலகாப்புத்தானுமிட்டு
நீலவிழிகண்களுக்கு நேர்மையுடன்மையெழுதி
பிள்ளைக்குத்திருஷ்டி பிரியமுடன்சுற்றுதற்கு
நெல்லும்அறுகும் நேரானமஞ்சளுடன்
பருத்திவிரைசுண்ணம்பு பரிவாகத்தான்பிசைந்து
தண்ணீர்முகந்துவந்து தாம்பாளத்திற்போட்டு
இப்படியாக இனிதுவளர்க்கும்நாளையிலே
மாதிகனைத்தானழைத்து மங்கையருமேதுசொல்வாள்

மதுரைவீரனுக்குக் காதுகுத்தல்

மூன்றும்பிராயத்தில் முத்தமிட்டுகாதுகுத்த
நல்லநாள்தொட்டு நட்சத்திரந்தான்பார்த்து
திட்டமுள்ளதட்டானைச் சீக்கிரமாயழையுமென்றாள்
அந்தநல்லாள்சொற்கேட்டு ஆனதொருமாதிகனும்
கூட்டிவந்துதட்டானை குழந்தையைப்பாருமென்றான்
பார்த்துமந்ததட்டானும் பாலகனுக்கேற்றாப்போல்
தங்கத்தால்கப்பி சதுராகத்தான்வளைத்து
கீழ்க்காதைமேற்காதை கிரமமாய்க்குத்திவிட்டான்
படியரிசிதட்சணையும் பாக்கிலையுஞ்சர்க்கரையும்
அத்தனையும்தான்கொடுத்து அனுப்பினான்தட்டானை
மாதிகனும்மங்கையரும் மனதுமிகத்தான்குளிர்ந்து
சந்தோஷமாகித் தயவாயிருபேரும்
இப்படியாக இருக்கின்றவேளையிலே

மதுரைவீரன் சக்கிலியன்வீட்டில் வளருகிறதைக்
காசிராஜாவுக்குத் தெரிவித்தல்

காசிபட்டணத்திருக்குங் கனத்தவெகுமாந்தர்களும்
மாதிகச்சின்னானுக்கு மைந்தன்வந்தசேதிதன்னை
பட்டணத்திலுள்ளகனம் பாங்குடனேதாமறிந்து

இராஜனுடபிள்ளையென்று நலமாகவோடிவந்து
மாதிகச்சின்னானும் மைந்தனைவளர்க்கின்றான்
என்றவர்கள்சொல்ல இந்தச்சமயத்தில்
இப்பெரியபட்டணத்தி லிருந்தோமேயானுக்கால்
தன்பிள்ளையென்று தானழைத்துக்கொண்டிடுவான்
மறுதேசம்போய் மங்கையரே நாம்பிழைப்போம்
அப்படியேநல்லதென்று அன்பாயிருவருந்தான்
மைந்தனைத்தானெடுத்து மறுதேசம்போனார்கள்
காடுமலைதாண்டி கடுகிநடக்கலுற்றார்
பொம்மணன்சீமைக்கு பொட்டெனவேவந்தார்கள்
யாதென்றுசொல்லி அழைப்பித்தார்பொம்மணனும்
எந்தவூரெந்தநாடு எங்கிருந்திங்குவந்தீர்
என்றதற்குமாதிகனும் ஏந்திழையுஞ்சொல்லுகிறார்
காசியென்னும்பட்டணத்தைக் கடந்தவரலாற்றைக்கே [ள்
பஞ்சைகள்பிழைக்க பரதேசம்நாங்கள்வந்தோம்
வயிறுபிழைக்க மறுதேசம்நாங்கள்வந்தோம்

மாதிகச்சின்னான் பொம்மணநாய்க்கனிடத்தில்
சேவகத்திற்கு அமருதல்

அந்தநல்லசேதி அறிந்தானேபொம்மணனும்
என்னிடத்திற்சேவகமாக இருப்பாயோமாதிகனே
அப்படியேநல்லதென்று அமர்த்தினான்பொம்மணனும்
சேவகஞ்செய்து சீருடனேதானிருந்தான்
சந்தோஷமாகத் தயவாயிருக்கையிலே
பிள்ளைக்குச்சிங்காரம் பிரியமுடன்பூட்டலுற்றான்
நெற்றிக்குச்சுட்டிகட்டி நிழல்கண்ணாடியுங்கட்டி
காதிலேமத்திக்காய் கனமாகத்தொங்கவிட்டு
பச்சைக்கல்முருகு பவளத்தால்தாழ்வடமும்
காலிற்சிலம்பணிந்து கைக்குத்தங்கக்காப்புமிட்டு
பூணாரமெல்லாம் பூட்டினான்மாதிகனும்
நாளொருமேனியுமாய் நலமாகத்தான்வளர்த்தான்
பத்துவயதானதின்மேல் பதினாலாம்வயதுதனில்
சரிகைசந்திரகாவி தலைப்பாகைசுட்டியுடன்
வன்னகம்பிசோமன் வகையாயுடுத்தியங்கே
பட்டுகம்பிசோமன் பாங்காய்வரிந்துகட்டி
இடதுபுறத்தொங்கலிலே ஏமனுட அட்சரமும்

112185

வலதுபுறத்தொங்கலிலே வடமலையானட்சரமும்
பார்வதிகடாட்சத்தால் பரிவாகவுண்டாச்சு
பஞ்சவர்னப்பட்டாடை பாங்கானசால்வையும்
முன்கையிற்சந்தனமும் முறுக்கிவிட்டமீசைகளும்
கஸ்தூரிபொட்டுமிட்டுக் கனத்ததிருமார்பிலுமே
சந்தனமும்புனுகுந் தாராளமாய்ப்பூசி
இப்படியாய்த்தானே இருந்துவருகையிலே

மதுரைவீரன் பராக்கிரமம்

குச்சிவுருமாலேகட்டிக் கூசாமல்வீரையனும்
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைசுங்குவிட்டு
காலில்மிதியடியும் கையிலுண்டைவில்பிடித்து
மந்திரவாளெடுத்து மதயானைபோலெழுந்து
எதிர்க்கத்தான்கண்டவரை எண்ணியேபாராமல்
கண்டமுனிராட்சதரைக் கண்டதுண்டமாக்கிடுவான்
காளிகதவடைக்க கண்டமுனிதெண்டனிட
வேட்டைகளாடுவதும் வேங்கைபுலிகுத்துவதும்
மாதிகன்சொல்கேளான் வனங்களிலேபோய்விடுவான்
கரடிபுலிசிங்கம் காட்டானைகொல்கிறதும்
வேஷங்கள்மாறி வீட்டில்வருகிறதும்
வருகிறதைக்கண்டு மாதாமனமகிழ்ந்து
வந்ததொருவீரனுக்கு வரிசையுடன்அன்னமிட்டு
குத்துப்பருப்புமிட்டுக் கூசாமல்நெய்வார்த்து
சுண்டைக்கறிவகையுஞ் சுகிப்பானபோஜனமும் [க
வாழைப்பழஞ்சர்க்கரையும் வகைவகையாய்தான்சமைக்
சாப்பிட்டுக்கையலம்பித் தாம்பூலந்தான்தரித்து
பள்ளியறையிற்புகுந்து பாங்கானகட்டிலிலே
பள்ளிகொண்டுவீரையனும் பண்பாகஎழுந்திருந்து
இப்படிதானும் இருக்குமந்தவேளையிலே

தொட்டியன்மகள் ருதுவான இடத்தில்
மதுரைவீரன் காவலிருந்தது

பட்டணத்தையாளும் பரிவானதொட்டியனும் [ண்
பொம்மணநாய்க்கன்மகள்பொம்மியம்மாளென்பவள்கா
புத்தியறிந்ததின்மேல் பூவைதனைபொம்மணனும்
ஊருக்குமேற்கே ஒருநாழிதூரத்திலே

பச்சைகுடிசைகட்டிப் பண்பாயலங்கரித்து
பொம்மியம்மாளைப் பொங்கமுடன்கூட்டிவந்து
அந்தக்குடிசைதனில் அமர்ந்திருக்கச்செய்துவைத்து
மாதிகச்சின்னானை வரவழைத்துத்தானுடனே
அல்லும்பகலும் அறுபதுநாழிகையும்
பட்சிபறவாமல் பகல்மோசம்வாராமல்
காட்டானைசிங்கம் காடிபுலிவாராமல்
கள்ளர்திருடர் கடுவிஷங்கள் தீண்டாமல்
காற்றுமழைவந்ததென்று காவல்தப்பிப்போகாமல்
இருட்டுக்கருக்கலென்று ஏமார்ந்திருக்காமல்
முப்பதுநாளும் விழித்துக்கொண்டுதானிருந்து
பைங்கிளியாள்கன்னிகையைப் பத்திரமாய்க்காத்திருப்
காரும்பிள்ளாயென்று கட்டளையுமிட்டானும் [பாய்
நல்லதையாவென்று நலமுடனேமாதிகனும்
மாதிகச்சின்னானும் மாளிகைக்குத்தான்வந்து
குச்சிஉருமாலைகட்டி கொடுவாளுங்கையேந்தி
கச்சைவரிந்துகட்டிக் கட்டாரிகைபிடித்து
அம்புவில்லுங்கையேந்தி ஆயுதங்கள்தான்தரித்து
பொம்மியம்மாள்காவலுக்கு போய்வாரேன்மாதிகனுன்
அல்லும்பகலும் அறுபதுநாழிகையும்
காகமணுகாமல் கருங்குருவிநாடாமல்
பட்சிபறவாமல் பகல்மோசம்வாராமல்
இப்படியாக இவன்காக்கும்நாளையிலே
வருணபகவானும் வந்துகவிந்ததினால்
ஈரேழுலகமெல்லாம் இருள்வந்துசூழ்ந்ததினால்
வயதுசென்றமாதிகனும் மனதுநொந்துமெய்நடுங்கி
பொம்மியம்மாள்காவலுக்குப் போகக்கூடாமையினால்
மனதிலேஎண்ணி மகனுடனேசொல்லலுற்றான்
வீரப்பன்தான்கேட்டு வெகுவாய்மனக்குளிர்ந்து
இந்தயிருட்டிலேதான் எப்படிநீர்போவீரையா
பிள்ளையென்றுநானிருக்க பெரியவர்நீர்போகலாமோ
மங்கையுடகாவலுக்கு மகன்தானான்போய்வாரேன்
என்றுசொல்லிதானும் எழுந்திருந்தான்வீரையனும்
எழுந்திருந்துதான்போய் எண்ணமற்றகாளையவன்
சலவைக்கல்மண்டபத்தில் சாமிபோல்நின்றுகொண்டு
சம்பங்கிஎண்ணையால் தலைமுழுகிமயிராற்றி

கோதிமயிரைக் கோணமல்சிக்கறுத்து
செங்கமலக்கையாலே சீக்கிரமாய்த்தான்முடித்து
சிவசிவாவென்றே திருநீறணிந்துகொண்டு
சந்தனங்கஸ்தூரி தானணிந்தான்மார்பதனில்
பஞ்சவர்ணப்பட்டாடை பாங்காயலங்கரித்து
சிவந்தஉருமாலை செண்டுகட்டும்பாவனையாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைசுங்குவிட்டு
முன்னின்றதொங்கலிலே மோககன்னிஅட்சரமாம்
பின்னின்றதொங்கலிலே பிர்மாவின்அட்சரமாம்
உள்ளே-கபாயணிந்து உடம்பெல்லாம்அங்கிபூண்டு
நெற்றிக்குச்சுட்டிகட்டி நேர்விழிக்குமையெழுதி
பாசிபந்துதாயித்தும் பாங்காகக்கையில்கட்டி
ஆபரணமெல்லாம் அலங்கரித்துத்தானுமப்போ
எட்டுதுலாங்கத்தி இத்துடனேகேடகமும்
உண்டைவில்லுங்கையில் உடைவாளுந்தான்தரித்து
பாக்குடனேவெற்றிலையும் பாங்காகத்தான்வாங்கி
மாதிகச்சின்னானை வந்துகண்டேயந்நேரம்
பொம்மியம்மாள்காவலுக்குப் போகவிடைதாருமையா
அப்படியேபோய்நீ அனுதினமும்காவல்செய்வாய்
என்றுசொல்லக்கேட்டு ஏற்றமுள்ளதென்மதுரை
நடந்தான்காண்வீரையனும் நாலுதிக்குந்தானதிர
சிங்காரத்தோப்பைச் சீக்கிரமாய்த்தான்பார்க்க
அலங்காரத்தோப்பில் அச்சமுற்றுத்தான்சேர்ந்தான்
பைங்கிளியாள்தன்குடிசை பக்கமேபோய்ச்சேர்ந்தான்
அந்நேரவேளையிலே ஆரணங்குபொம்மியம்மாள் [த்து
குடிசைவிட்டுவெளியில்வந்து கொப்பெனவேதான்பார்
தென்மதுரை நிற்கிறதை தேன்மொழியுங்கண்டாளே
நிற்கிறதைக்கண்டு நெடுநேரம்மெய்மறந்து
ஆரோதெரியாது அர்த்தராத்திரிவேளைதன்னில்
மாதிகனல்லயிவன் மாற்றானய்க்காணதென்று
ஆடாநிற்கிறவன் அஞ்சாமற்சொல்லிடுவாய்
ஆரோவெனச்சொல்லி அஞ்சாதேயங்கையேநீ
மாதிகச்சின்னான்பெற்ற மைந்தன்தானனென்றான்
நல்லதென்றுசொல்லி நடந்தாள்குடிசைக்குள்
பைங்கிளியாள்போய் படலெடுத்துசாற்றியபின்

கட்டிலின்மீதிருந்து கட்டளைகள்சொல்லுகிருள்
பத்திரமாய்நீயும் படுத்திரடாவென்றுசொன்னுள்

மதுரைவீரன் பொம்மியம்மாளிடஞ் சேருதல்

மதுரையன்தான்கேட்டு வகையுடனேபேசலுற்ருன்
போட்டதொருகட்டிலிலே போய்ப்படுத்தாய்பெண்ணே
ஒண்டியொருவனுமாய் உட்கார்ந்திருப்பேனே
மங்கையரேநானும் மழையில்நனைகிறது
ஆண்பாவம்பொல்லாது அதட்டினுலுந்தோஷமடி
இருட்டிலொருவனுமாய் இருப்பேனேபெண்ணரசே
குடிசைக்குள்வரவழைத்தால் கோடிதர்மமுண்டுனக்கு
இவ்வார்த்தைகேட்டிருந்த ஏந்திழையுங்கூறுகின்ருள்
சக்கிலிப்பயலுக்கு தலைப்புழுகுஆடுகிறது
ஏளனம்பேசி எடுத்துரைக்கவந்தாயடா
காவல்செய்யவந்தாயோ கற்பழிக்கவந்தாயோ
என்னபிதற்றுகிருய் எழுந்திருந்துபோடா நீ
கூவென்ருல்கேட்டு கோடிபடைவந்துவிடும்
உந்தனையும்வெட்டி உயிர்க்கழுவில்போட்டிடுவார்
பையலென்றபோதே பதைக்குதடியெந்தனுக்கு
தலைவெட்டிப்போனுலும் சக்கிலிநான்விடுவதில்லை
உந்தனையும்விட்டுஎந்தன் உயிர்தானும்போகாது
ஈரத்தில்நின்ருல் என்னுடம்புக்காகாது
எந்தனுடன்நீயும் இசைவாகத்தான்கூடி
குடிசைக்குள்என்னையழைத்து கூடினுலுந்தனுக்கு
கோடிதருமமுண்டு கோதையேநம்படி நீ
சக்கிலியனுனுலுந் தனஞ்செயனுவேனடி
கன்னியேகொஞ்சநாளில் காட்டுகிறேன்சவுரியத்தை
இந்நேரவேளைதனில் இருவருமேகலந்து
மருவியிருவருமாய் மங்கையேபெண்மயிலே
காமவிகாரங் களையாய்வருகுதடி
மன்மதபாணம் மார்பில்வந்து தைக்குதடி
பஞ்சணைமெத்தையின்மேல் பக்கத்திடங்கொடுத்து
இருவருமாய்க்கூடி இருப்போமடிபெண்ணரசே
கூடியிருந்தோமானுல் தோகையரே நீதானும்
சந்தனங்கஸ்தூரி தான்பூசிவாழ்ந்திருப்பாய்
பால்பழமுஞ்சர்க்கரையும் பசியாமலுண்டிருப்பாய்
வெற்றிலையும்பாக்கும் விதவிதமாய்த்தானுகர்வாய்

ஏதேதுகேட்டாலும் எடுத்துவந்துநான் தருவேன்
மங்கையேநான்கேட்கிறது உன்மனதுமுருகலேயோ
கல்லுங்கரையுமடி கடலும்இளகுமடி
உன்வடிவுக்கேற்ற உத்தமனும்நான் தாண்டி
ஏதுக்குமஞ்சாதே இளமயிலேபெண்ணணங்கே
இப்படியாக இன்பமுடன்கேட்கையிலே
பேதைமயில்போல பெண்ணணங்குகேட்டிருந்து
எண்ணுதுமெண்ணி ஏங்கியழுகலுற்ருள்
ஈஸ்வரனேஎன் தலையில் என்னஎழுதிவிட்டாய்
கன்னிகழியாமல் கலியாணஞ்செய்யாமல்
சக்கிலியன்கற்பழிக்கத் தலையிலெழுதினையோ
என்றுசொல்லிகன்னியரும் ஏங்கிமுகம்வாடி
முத்துபோல்கண்ணீரை முகமெல்லாஞ்சோரவிட்டாள்
பவளம்போல்கண்ணீரை பக்கமெல்லாஞ்சோரவிட்டா [ள்
அழுதுமுகம்வாடி அவளிருக்குங்குடிசைக்குள்
மண்டியிட்டுத்தானுழைந்து மடிமேலுட்காரவைத்து
மங்கையரைத்தானும் மார்போடேதானணைத்தான்
ஏந்திழையேயுந்தனுக்கு என்னவிசாரமடி
ஆரென்றிருக்கிருய் அருங்கிளியேபெண்மயிலே
காசிராஜன்பெற்ற கருத்துள்ளவீரனடி
மகிமைதெரியாமல் மயங்குகிருய்பெண்மயிலே
என்றுசொல்லித்தானும் எடுத்தவளைக்கண்துடைக்க
மங்கையரும்பார்த்து மனமுங்குளிர்ந்தாளாம்
தெளிந்துமுகமலர்ந்து தேன்மொழியாளப்போது
கண்குளிரப்பார்த்து கன்னிகையுமேதுசொல்வாள்
முன்னழகும்பின்னழகும் மூவுலகிற்கிட்டாது
மார்பழகைக்கண்டால் மயங்குவார்கோடிபெண்கள்
உருமாலைகட்டழகும் உருத்திராட்சந்தன்னழகும்
சந்தனங்கஸ்தூரி தானணிந்தான்மங்கையர்க்கு
புனுகுசவ்வாது பொங்கமுடன்பூசலுற்ருன்
மல்லிகைப்பூசண்பகப்பூ வரிசையாய்தான்தரித்தான்
உத்தரியந்தானெடுத்து உத்தமிமேல்தான்தரித்தான்
மங்கையருமப்போது மனமகிழ்ந்துகட்டிலின்மேல்
என்னைவலதழிக்க எத்தனைநாள்காத்திருந்தாய்
மகாதேவரருளினுல் மண்பிடித்தவேளையிலே
மன்னவனேயெந்தனுக்கு வளர்ந்தீரோபூமிதனில்

என்றுசொல்லிதானகைத்து இசைவாகக்கன்னிகையும்
அடைக்காயும்வெற்றிலையும் அன்பாகமுன்புவைத்தாள்
பாக்கிலையுந்தானருந்திப் பரிந்துவிளையாடி
காமவிகாரங் கண்ணைமறைத்ததப்போ
மன்மதபாணம் மார்புருகிப்போகையிலே
தோகையணிந்த துகிலாடைதான்களைந்து
மங்கையரைத்தானணைந்தான் மாணிக்கக்கையாலே
கட்டியணைத்தான் கனிவாயைமுத்தமிட்டான்
முகத்தோடுமுகம்வைத்து முத்தமிட்டாரிருவருமாய்
கந்தருடன்வள்ளியம்மை கைகலந்தபாவனைபோல்
பார்வதியாள்தன்னுடனே பரமசிவன்சேர்ந்ததுபோல்
கூடிமகிழ்ந்து குலாவிவிளையாடி
மதுரைமகாவீரன் மங்கையுடன்தான்சேர்ந்தான்
இப்படியாக இருந்துவிளையாடினபின்
கட்டில்விட்டுத்தானிறங்கி கன்னிகையுமப்போது
புருஷனேதெய்வமென்று பொற்கொடியும்தானினைந்து
தென்மதுரைவீரனுக்கு தெண்டனிட்டுநிற்கையிலே
மன்னவனுமப்போது மங்கையரைத்தானெடுத்து
காலில்விழுந்த காரணத்தைக்கேழ்க்கலுற்றான்
பெண்ணரசிவாய்திறந்து பிரியமுடன்சொல்லுகிறாள்
மானிடவர்தானே மகாதேவர்நீர்தானோ
எவ்வுலகராஜாவோ ஈஸ்வரனார்தன்மகனோ
ஆர்பெற்றகண்மணியோ அரிவையர்க்குகூறுமென்றாள்
மாதிகன்வீட்டில்வந்தவகையதனைச்சொல்லுமென்றாள்
தாய்தகப்பன்பேரும் தனஞ்செயனேசொல்லுமென்றாள்
மதுரையான்வந்தவகை மங்கையரேசொல்லுகிறேன்
கைலாசநாதர் கடாட்சத்தின்தன்னாலே
காசிமகாராஜனுக்குக் கண்மணியாய்நான்பிறந்தேன்
மாலையுடன்பிறந்தேனென வனத்திலேபோட்டுவிட்டா
வனத்திலிருந்துஎன்னை மாதகிளடுத்துவந்தாள் [ர்
சக்கிலியன்வீட்டில் வளர்ந்தவனடிதையலரே
என்றுசொன்னசொற்கேட்டு இனிதாய்மனமகிழ்ந்து
இந்தமட்டுந்தான்சேதி இனியொன்றும்நானறியேன்
என்றுசொன்னசொற்கேட்டு இனிதாய்மனமகிழ்ந்தாள்
பொழுதுவிடிகிறது போய்ப்பிழையும்மன்னவனே
நாளைப்பொழுதிலுன் நாகரீகம்பேசுவீர்காண்

இப்படிதானும் இருக்குமந்தவேளையிலே
கங்குல்விடிந்து கதிரோனும்வந்துதித்தான்
தேன்மொழியாள்குடிசைவிட்டுசீக்கிரம்வெளியில்வந்து
கிழக்குமுகமாயிருக்குங் கேணியிடம்போயதனில்
கால்முகஞ்சுத்திசெய்து கனிவாயுங்கொப்பளித்து
சிவசிவாவென்றே திருநீறுதானுமிட்டு
அரகராவென்றுசொல்லி ஐயனையும்தான்தொழுது
கோதைமயிலனையாள் குடிசைக்குள்தானுழைந்தாள்
மதுரைவீரன்தானும் மாதிகன்வீடுபோனான்
மாதிகனும்ஓடிவந்து மைந்தனைத்தான்தழுவி
இந்நேரம்என்னசெய்தாய் எந்தனதுகண்மணியே
மழையில்நனைந்ததினால் மறந்துநான் தூங்கிவிட்டேன்
நல்லதென்றுகூட்டிப்போய் நலமுள்ளமாதிகனும்
மங்கையரேபெண்ணே மைந்தனுக்குஅன்னமிடு
மாதாமனமகிழ்ந்து வட்டில்விளக்கிவைத்து
சம்பாஅரிசி சமைத்தசாதம்படைத்து
தயிரெடுத்துவார்த்து தயவாய்ப்புசியுமென்றாள்
வற்றல்வடகம் வகையுடனேயூறுகாய்
கூட்டியமுதுண்டான் குணமுள்ளவீரனுமே
உண்டுபசியாறி உத்தமனும்வீற்றிருந்தான்
கங்குல்வருமுன்னே கதிரோனும்போய்மறைந்தான்
இன்றையகாவலுக்கு என்மகனேபோய்வருவாய்
நல்லதென்றுவீரையனும் நடந்தானே அப்போது

மதுரைவீரன் பொம்மியம்மாளுக்குத் தாலிதரித்தல்

பொன்னாபரணமெல்லாம் பூட்டியலங்கரித்து
ஆயுதமெல்லாமெடுத்து அரிவாளுங்கைபிடித்து
பார்த்தபேர்மோகிக்கப் பஞ்சவர்ணப்பொட்டுமிட்டு
மங்கைக்குத்தான்தரிக்க மங்கிலியங்கைக்கொண்டு
நாடிக்குடிசைதனை நடந்தானேவீரையனும்
மங்கைகுடிசைதனில் மன்னவனும்வந்துநின்றான்
காரிகையுமப்போது கண்டுமனமகிழ்ந்தாள்
ஆனாலும்பெண்ணரசே அன்பாகச்சொல்லுகிறேன்
மங்கிலியம்கட்டாமல் மாதேயுனையணைந்தேன்
மங்கிலியஞ்சூட்ட மகிழ்ச்சியாய்வந்தனடி
இந்தசொற்கேட்டு ஏந்திழையாளப்போது
கழுத்திலேமங்கிலியங் கண்டதேயுண்டானால்

அம்மான்மார்கூடி அறுத்து துசந்தொடுப்பார்
என்தகப்பன்தானும் இருதுண்டாய்வீசிடுவார்
இப்படியாக ஏந்திழையுஞ்சொல்லிமுடித்தாள்
ஏதுக்குமஞ்சாதே இளங்கொடியேபெண்மயிலே
ஆதிசிவன்பிர்மா ஆயனுடன்பார்வதியும்
முப்பத்துமுக்கோடி முனிவர்களுந்தேவர்களும்
அரனார் திருமகனும் ஆனைமுகப்பிள்ளையாரும
எல்லோரும்பார்த்திருக்க இந்தச்சிறுதாலிதனை
மஞ்சள்சரட்டில் வகைவகையாய்த்தான்கோர்த்து
சாணமெடுத்துவந்து சதுராகத்தான்மெழுகி
பிள்ளையார்தன்னை பெட்புடனேதானிறுத்தி
அறுகுகொண்டுவந்து அன்பாய்விநாயகருக்கு
புஷ்பங்கள்தூவியல்லோ போற்றிமிகத்துதித்து
பாதத்தின்முன்பாகப் பாங்கானதாலிதன்னை
வைத்துஇருவரும் வணங்கியேதெண்டனிட்டு
சாம்பிராணிதூபம் சதுராகத்தான்கொடுத்து
தேவர்களப்போது சிறப்பாகப்பார்த்திருந்தார்
அந்தநல்லவேளையிலே ஆண்சிங்கவீரையனும்
சரட்டுடனேதாலிதன்னைச் சாங்கமாய்த்தானெடுத்து
தேவர்களைநோக்கித் தெண்டனிட்டுவீரையனும்
சிவசிவாவென்றுசொல்லித் திருமங்கிலியந்தன்னை
தோகைநல்லாள்கழுத்தில் சூட்டினனப்போது
அந்தரத்தேவர்களும் அலங்காரமாகவேதான்
பூமாரிதானும் பொழிந்தார்களக்கணமே
ஆணிமுத்துவீரையனும் ஆரணங்குபொம்மியரும்
திட்டமுடனெழுந்து தீர்க்கமுடன்தேவர்களை
அடிபணிந்துதெண்டனிட்டு அன்பாகநின்றார்கள்
ஆசிகள்செய்து யாவரும்வரமளித்தார்
பொன்னுலகவாசலிலே போனார்கள்தேவரெல்லாம்
ஆணிமுத்துவீரையனை ஆரிழையாள்தான்பார்த்து
ஆதிசிவன்கர்த்தர் அயர்ந்தசபைதானறிய
மங்கிலியந்தான் தரிக்க மைத்துனரேவாருமென்று
கட்டிலில்இருவருமாய் கைகோர்த்துதானிருந்து
சிரித்துவிளையாடி தேன்மொழியைதானணைந்தான்
அணைத்துவிளையாடி ஆவலெல்லாந்தீர்த்தார்கள்
தீராதஆசையெல்லாந் தீர்த்துஇருவருமாய்

வாருங்கள்மைத்துனரே வார்த்தையைகேளுமென்ருள்
மூப்பதுநாளும் முடிந்ததுகாண் நாளையுடன்
நாளைக்குஇக்குடிசை நலமாகத்தான்பிடுங்கி
மாளிகைக்குத்தானழைக்க வருவார்காணென் தகப்பன்
உன்னைவிட்டுநான்பிரிந்து உகந்துயிருப்பேனே
இருவருமாய்க்கூடி இனிதாய்விளையாட
என்றைக்குத்தானமையும் ஏந்தலேசொல்லுமென்ருள்
நாளைக்கிழமைக்கு நான்வருவேன் என்றுசொன்னுன்
நாளைப்பொழுதில் நலமாகக்காண்பீர்காண்
அதன்பிறகுஎன்னையல்லோ ஆர்பார்க்கப்போகிருர்கள்
என்னைத்தவிர எவளுனக்குமாகாதோ
தேசத்தில்வேருெருபெண் சிக்காதோதேசிகனே
மண்டலத்தில்நான்தானே மற்ருெருபெண்கிட்டாதோ
என்குறிஞ்சிக்கோட்டைக்கு இதமாகவந்தீரென்ருல்
கோட்டைக்குறிக்காரர் கொத்தளத்துசேவகரும்
மன்னவரேஉமக்கு வழிவிடத்தான்போருரோ
பத்துதலைவாசலுக்கு பத்துலட்சங்கோடிமன்னர்
தொட்டியர்கள்காவல் துடுக்காஇருக்குமங்கே
வந்தாலுமும்மை வலுமையுள்ளதொட்டியர்கள்
கள்ளனென்றுதான்பிடித்துக் கைகாலைவாங்கிடுவார்
உயிர்க்கழுவில்போட்டு உன்தலையைவெட்டிவைப்பார்
இந்தப்படிகாவல் ஏற்றமுள்ளதொட்டியர்கள்
பொல்லாதலண்டன் போக்கிரிகாண்என்தகப்பன்
இப்படியெல்லாம் இகழ்ச்சியாய்ச்சொன்னேனென்று
மன்னவரேநீர்தானும் மனவருத்தங்கொள்ளாதே
நடக்கும்வழிவகைகள் நானறிந்துசொன்னேன்காண்
என்னைமறவாமல் ஈடேற்றவேணுமென்ருள்
புண்ணியனேஉம்மைவிட்டுப் பொருந்தேனரைநாழி
என்றுசொல்லிபொம்மியரும் ஏங்கிமுகம்வாடி
என்னையும்விட்டு இருப்பீரோபூமியிலே
மன்னவரேஉம்மைவிட்டு மண்மேலிருக்கேனென்று
கண்ணீரும்விட்டழுது கலங்கினுள்பொம்மியரும் [மூ
அதுகண்டுவீரையனு மழவேண்டாம்பெண்மேணே என்
கண்ணீர்தனைத்துடைத்து காவலனுமேதுசொல்வான்
உன்னைநான்கொண்டு ஊர்வழியேபோவனடி
இருவரும்போய்பிழைப்போம் ஏகமுள்ளபெண்ணரசே

தேறுதலைச்சொல்லித் தென்னவனுந்தானடந்தான்
அந்தநல்லவேளையிலே ஆனதொருமாதிகனும்
மைந்தனைத்தான்பார்த்து மாதிகனும்அப்போது
முப்பதுநாளும் முடிந்ததுஇப்போது
ஆகையினால்இப்போது ஆனதொருபொம்மியர்க்கு
காலுக்கிசைந்ததொரு கனத்தமிதியடியும்
மைந்தனேஉன்கையால் வளமாகச்செய்வதற்கு
மிதியடிக்கானதொரு வேணதொருரத்தினங்கள்
தங்கத்தால்சரிகைகளும் தனிவயிரமுத்துகளும்
பொம்மணநாய்க்கர் புதல்விக்குவேணுமென்று
மிதியடியைத்தைக்க விரைவாகஎன்கையில்
தந்தார்காண்இரத்தினத்தை தயவாகநீயெடுத்து
வாருங்கள்மேலே வகையாகத்தான்சமைத்து
திட்டமுடன்கட்டி சீராகவையுமைந்தா
அந்தசொற்கேட்டு ஆணிமுத்துவீரையனும்
சந்தோஷங்கொண்டு தானெழுந்து அந்நேரம்
குட்டியாட்டுத்தோலை கொற்றவனுந்தானெடுத்து
அட்டைக்குவளமான அட்டையுந்தான்சேர்த்து
அதற்கேற்றமேல்வாறு அடைவாகத்தானறுத்து
ஒருநாழிகைக்குள்ளே உச்சிதமாய்மிதியடியும்
கட்டியங்கேதானெடுத்து காரணனுமப்போது
தகப்பன்தனையழைத்து தான்கொடுத்தார்வீரையனும்
பார்த்துமனமகிழ்ந்து பாலகனைக்கொண்டாடி
மாதிகனும்வாங்கி மனமகிழ்ந்துவைத்திருந்தான்

பொம்மியம்மாளை வீட்டிற்கு அழைத்துக்கொள்ளல்

முப்பதுநாளும் முடிந்ததுகாணப்போது
பொழுதுவிடிந்தபின்பு பொம்மணநாய்க்கனுமே
பொம்மியம்மாளுக்கு பொருந்திசடங்குசெய்ய
கூட்டத்துடனே குடிசைக்குத்தான்வந்து
குடிசைபிடுங்கி கொளுத்திவிட்டபிற்பாடு
பொம்மியம்மாள்தன்னை பொங்கமுடன் நீராட்டி
கூறையுடுத்திக் கோர்வைபணிபூட்டி
கொப்பிட்டுவாளியிட்டு குந்தளப்பொன்ஓலையிட்டு
கருங்குருவிவாலது கண்ணுக்குமைதீட்டி
நெற்றியிற்றிலர்தமதை நேராகத்தானுமிட்டு
உட்கழுத்துத்தாலி உயர்த்தியுள்ளகல்லிழைத்து

கட்டுவர்க்கந்தன்னாலே கழுத்திற்சரமணிந்து
மோகனமாலை முத்தாபரணமின்ன
மார்பில்பதக்கம் வகையுடனே தானணிந்து
கடகஞ்சரிபவளம் கைவளையல்தானணிந்து
பத்துவிரலுக்கும் பசும்பொன்னாற்காலாழி
இடுப்பிலொட்டியாணம் இசைவாகத்தான்பூட்டி
காலாழிபீலாழி கனத்தசிலம்பணிந்து
பாடகம்தண்டை பாதசரம்பூட்டி
வங்கிதலைசாமான் வயிரத்தால்மார்பதக்கம்
பூணாரமெல்லாம் பூட்டியலங்கரித்தார்
அந்தநல்லவேளையிலே ஆனதொருமாதுகனும் [ன்
மிதியடியைத்தானெடுத்து விரைவாகக்கொண்டுவந்த
வந்தநொருபொம்மணனும் அன்பாய்மிதியடியை
பொம்மியம்மாளுக்குப்புகழ்ச்சியாய்த்தான்கொடுத்தான்
மிதியடியைத்தான்பார்த்து வேலனையகண்ணாளும்
மதுரைவேலைஎன்று மனங்குளிர்ந்தாளப்போது
தொட்டியத்துச்சக்கிலியர் துரிசாகக்கொம்பூத
தப்பட்டைமேளம் தவில்முரசுதான்முழங்க
எருதுமேல்நகாரு எட்டுதிசையதிர
புல்லாங்குழலூதப் பேரிகையடித்துவர
நாகசுரமேளம் நாட்டியங்களாடிவர
பதினெட்டுமேளம் பாங்குடனே தானொலிக்க
வெடிசத்தமெங்கும் வேணபடிதானதிர
கட்டியர்களெச்சரிக்க காவல்கொண்டாடிவர
வாராளாம்பொம்மியம்மாள் வர்ணமணிமாளிகைக்கு
ஆலாத்திசுற்றும்பெண்கள் அன்னம்போல்நடந்துவர
பொம்மியம்மாள்தனக்குப் பொருந்ததிருஷ்டிகழிக்க
முத்தாலேஆலாத்தி மூவாயிரங்கோடி
மாணிக்கஆலாத்தி வகைவகையாய்த்தானெடுத்து
திருஷ்டிகழித்தார்கள் தீங்கெல்லாம்விட்டோட
கட்டியங்கூறக் கவரிபணிவீச
மங்கைநல்லாள்பொம்மி மாளிகையினுட்புகுந்தாள்
அந்நேரவேளையிலே ஆனதொருபொம்மணனும்
தையல்நல்லாளுக்குச் சடங்குசெய்யவேணுமென்று
வேதப்பிராமணரை விதியுடனே தானழைத்து
நல்லதினந்தானென்று நன்றாகப்பாருமென்றான்

சித்திரைமாதஞ் சிறந்தசிம்மலக்கினத்தில்
நல்லவேளையென்று நாலுபக்கங்கால்நாட்டி
சந்தனக்கால்நாட்டி சதுர்முகக்கால்நாட்டி
பத்தரைமாற்றுப் பசும்பொன்விரைபரப்பி
செண்பகப்பூவரும்பால் சிறக்கவேமாலைகட்டி
மெல்லிநல்லாள் தானிருக்க மலர்கட்டித்தொங்கலிட்டு
பச்சைக்கிளியும் பசும்பொன்கலசமிட்டு
தூணுக்குத் தூணில் தூங்காவிளக்கெரிய
குத்துவிளக்கெரிய குடவிளக்குநின்றெரிய
தப்பட்டைமேளம் தவில்முரசுதான்முழங்க
எக்காளமூத எங்குங்கிடுகிடென்ன
பாளையப்பட்டிலுள்ள பரிசனங்களத்தனையும்
துரைகள்துரைமக்கள் துரைராஜமன்னவரும்
மங்கிலியப்பெண்கள் மங்கையர்கள்கூட்டமுடன்
மாணிக்கமணவரையில் மங்கைதனைக்கூட்டிவந்து
வச்சிரத்தால்முக்காலி வரிசையாய்த்தான்போட்டு
பொம்மியரைக்கொண்டுவந்து பொங்கமுடன் நிறுத்தி
சாஸ்திரஞ்சொன்னபடி சதிராகத்தான்முடித்து [ர்
அன்னையும்பொம்மிதனை யரண்மனைக்குகொண்டுவந்தா
வந்தவுறன்முறைக்கு வரிசையாய்பொம்மணனும்
சந்தனங்கஸ்தூரி தான்பூசிஎல்லோர்க்கும்
பரிவுடனேதானும் பாக்கிலையுந்தான்கொடுத்தான்

விருந்திடல்

விருந்தங்களித்தார்கள் விகசிதமாய்தொட்டியர்க்கு
ஆயிரங்கலச்சம்பா அவைவுடனேதான்வடித்து
பதின்கலப்பருப்பு பாங்குடனேதான்சமைத்து
வாழைக்காய்பொரியல் வழுதலங்காய்புளிச்சமையல்
பச்சடியில்நூறுவகை பாற்குழம்புதான்சமைத்தார்
மோர்குழம்புஆமவடை முருங்கைப்பூகூட்டமுது
கீரையில்பத்துவிதம் கிரமமாய்த்தான்சமைத்து
பலவகைபதார்த்தங்கள் பண்பாகத்தான்சமைத்து
அதிரசம்பேணி அதிசயமாகத்தான்சமைத்து
போளிசுகியம் பொங்கமுடன்தான்செய்து
இலட்டுஜிலேப்பி இலட்சணமாகச்சமைத்து
காராசேவுபூந்தி கனத்தகற்கண்டுடனே
சர்க்கரையினுல்பதுமை தங்கமுடன்தான்செய்து

வடையப்பளமும் வகைவகையாய்த்தான்சமைத்து
இட்டலிதோசை இனிப்புள்ளகாரமுடன்
அன்பாகத்தான்சமைத்து அளவில்லாபலகாரமுடன்
வாழைபலாக்கனியும் வண்மையுள்ளமாங்கனியும்
தேனுடன்சர்க்கரையும் தெவிட்டவேதான்போட்டு
புத்துருக்குநெய்யும் பொங்கமுடன்தான்வார்த்து
பால்விட்டபாயசமும் பத்துவிதந்தான்செய்து
இத்துடனேகூட ஏற்றகறிவகைகள்
வேணபடிசெய்து விதவிதமாய்த்தான்சமைத்து
பந்திபரிமாறி பாங்காய்விசாரித்து
உறன்முறையோரெல்லோரும் உண்டுபசியாறி
கைகால்அலம்பிக் கனிவாயைக்கொப்பளித்து
வந்துஉட்கார்ந்தார்கள் வண்மையுள்ளபந்தலிலே
சந்தனமும்புஷ்பமும் தயவாயலங்கரித்து
அடைக்காயும்வெற்றிலையும் அன்பாகவேயளித்தார்
வால்மிளகுஏலக்காய் வண்மையுள்ளஜாதிக்காய்
ஜாபத்திரிகிராம்புடனே சம்பிரமமாய்த்தான்கொடுத்து
அருகிலிருந்து அனைவரையும்பூஜித்தார்
இப்படியாக இருக்குமந்தவேளையிலே
மாதிகச்சின்னானும் வண்மையுள்ளவீரனுமே
சாதம்கறிவாங்கத் தான்வாரார் அந்நேரம்
பொம்மணநாய்க்கரும் பொறுமையுடனேபார்த்து
ஆரடிதாதிகளே அன்னம்படையுமென்றார்
படையுமென்றசத்தம் பைங்கிளியாள்தான்கேட்டு
ஆரென்றுசொல்லி அலண்டுஎழுந்திருந்தாள்
தாதியருமப்போது சக்கிலியனென்றுசொன்னார்
சாதங்கறியுடனே தட்டில்பரிமாறி
கொண்டுவாவென்று கூறலுற்றாளப்போது
தாதியரும்முன்னடக்க தையலருங்கூடவந்து
மாதிகர்க்குப்பெண்ணரசி வாரியமுதிட்டாள்
மதுரைநல்லவீரையனை மங்கையருந்தான்பார்த்தாள்
நல்லதென்றுசொல்லி நலமாய்எழுந்திருந்தான்
தகப்பனுடன்கூட தன்மனைக்குப்போய்ச்சேர்ந்து
நடுராத்திரிவீரையனும் நல்லணங்கைத்தானினைந்து
மைந்தனென்றுதான்வளர்த்த மாதிகர்க்குங்கூறாமல்
பதினைந்துநாழிகையில் பள்ளியறைவிட்டு

சர்வாபரணமெல்லாந் தானணிந்தானப்போது
மாளிகையைவிட்டு வாரான்காணுவனுடன்
பொம்மிமேலாசைகொண்டு புறப்பட்டான்வீரனுமே
கொள்ளைகொண்டவீரனுமே கோட்டைக்குமுன்வந்து
அனுமார்லகுவெடுத்து அதிரக்குதித்தான்காண்
பத்துகட்டுவாசலையும் பாங்காகத்தான்கடந்து
பொம்மியர்க்குகாவலாய் பொம்மணனுமப்போது
தலைவாசல்முன்பாக சப்ரமஞ்சக்கட்டிலின்மேல்
உருவினகத்தியுடன் உறங்குகிறான்பொம்மணனும்
இத்தனைகட்டுதிட்ட மிருந்துநம்மைஎன்னசெய்வான்
என்றுசொல்லித்தான்சிரித்து ஏற்றமுள்ளவீரையனும்
ஈயைப்போல்வடிவெடுத்து இரப்பிலேபோய்நுழைந்தா
மெள்ளநுழைந்துபோய் மெல்லியரைத்தானெழுப்ப[ன்
தேன்மொழியாள்பொம்மி திடுக்கென்றெழுந்திருந்து
கணவனைக்கண்டவுடன் கன்னியரும்பூரித்தாள்
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
இருவருந்தான்தழுவி இருந்தார்கள்பஞ்சணையில்
தென்மதுரைவீரையனைத் தேன்மொழியுந்தான்பார்த்
அங்கங்கேகாவல் ஆனதொருசேவகரும் [து
தொட்டியர்கள்காவல் துடுக்கர்தங்காவலங்கே
மாளிகைவாசலிலே மன்னனுனைஎன்தகப்பன்
உருவினகத்தியுடன் உன்மாமன்தானிருக்க
கோட்டைதலைவாசல் கொத்தளமுந்தான்கடந்து
இந்தநல்லகாவலிலே எப்படி நீர்வந்தீரென்றாள்
கேளடிபெண்மயிலே கிரீடிக்கிறதற்காக
ஏந்திழையேஉன்னைவிட்டு இருக்கேன்அரைநாழி
அரண்மனையில்நீயிருந்து அவ்விடத்தில்நானிருந்தால்
ஏகாந்தமெங்கேயடி இருவருக்கும்பெண்ணரசே
ஆகையினாலே ஆரணங்கேஉனை நினைந்து
கட்டுடன்காவல் கடந்துவந்தேன்என்சமர்த்தால்

மதுரைவீரையனும் பொம்மியம்மாளும்
திருச்சினாப்பள்ளிக்குப் புறப்படல்

வாருமடிபெண்ணே வையகத்திற்போய்பிழைப்போம்
தெற்கேஒருகோட்டை திருச்சினாப்பள்ளியென்று
இருக்குதடிபெண்மயிலே இருவரும்போவோமென்றான்
நல்லதென்றுசொல்லி நலமுள்ளமங்கையரும்



மதுரைவீரன் பொம்மியம்மாள் திருச்சிக்கு புறப்படல்

மாணிக்கப்பெட்டியை வகையுடனேதான் திறந்து
செலவுக்கோராயிரம்பொன் சீக்கிரமாய்த்தானெடுத்து
ஒற்றைக்கால்கூடாரம் உத்தமனுந்தானெடுத்து
அத்தனையுந்தானெடுத்து ஆரணங்குமன்னவனும்
போகவேணுமென்றுசொல்லி புறப்பட்டாரிருவருமாய்
கதவைத்திறந்தவுடன் கன்னிகையுங்காளையரும்
மாளிகையைவிட்டு தலைவாசலிலேவந்து நின்று
திறந்தகதவை சேரவேதான்மூடி
காளைதனையழைத்து காவலிருக்கச்செய்து
தாப்பாளும்பூட்டும் தப்பாமல்பூட்டிவிட்டு
என்றுசொல்லிமதுரை இதமாகநீறெடுத்து
மந்திரித்துப்போட்டு மன்னவனுமப்போது
பொம்மணனேறும் புரவிதனையழைத்து
தங்கக்கடிவாளந் தாராளமாய்ப்பூட்டி
பத்தரைமாற்றுப் பசும்பொன்னால்ஜீனிகட்டி
கூடாரத்தையடித்து குதிரையின்மேல்போட்டு
பட்டாபெரியகத்தி பாங்குடனேதானெடுத்து
பொன்புரவிமேலே பொம்மியரைத்தூக்கிவைத்து
கடிவாளங்கைபிடித்துக் காரணனுமேறலுற்றான்
கோட்டைகடந்து கொள்ளைகொண்டமதுரையனும்
கொல்லிமலைகடந்து கோனேரிஆறுவிட்டு
ஆமூர்வழியாக ஆற்றில்வந்துதானிறங்கி
நாட்டினான்கூடாரம் நட்டாற்றில்மதுரையனும்
பலகாரஞ்சாப்பிட்டு பள்ளிகொண்டாரிருவருமாய்
ஏகாந்தப்பேசி இருக்குமந்தவேளையிலே
பொழுதுவிடிந்தது பொம்மணனுமப்போது
பட்டத்துப்புரவியையும் பட்டத்துக்கத்தியையும்
காணாததினாலே கலக்கமுற்று அந்நேரம்
பொம்மியம்மாளைப் புகழ்ச்சியாய்க்கூப்பிட்டு
பேசவில்லையென்று பேர்த்தெறிந்தான் அக்கதவை
பார்த்துமகளில்லையென்று பதறிவிழுந்தான்காண்
பொம்மியரைக்காணேனென்று புலம்பிவெளியில்வந்து
வேதியர்சொன்னதெல்லாம் மெய்யாச்சுதென்று
பட்டணத்திலுள்ள பரிஜனங்களத்தனையும்
திக்குதிசைகளெல்லாந் தேடித்திரிகையிலே
மாதிகச்சின்னானும் மகனையுங்காணேனென்று

எதிராகவந்தான்காண் எண்ணமற்றசக்கிலியன்
எல்லோரும்பார்க்க எடுத்துரைத்தானந்நேரம்
மாதிகன்மகனும் மங்கையரைக்கொண்டுசென்றான்
என்றுசொல்லிநாய்க்கனுக் கெடுத்துரைத்தாரந்நேரம்

மதுரைவீரன்மேல் பொம்மணன் படையெடுத்தல்

சேனைகளைக்கூட்டி திரளாகப்போவதற்கு
பதினாயிரம்வெடிக்காரர் பாங்குடனேகூட்டமிட்டார்
வளைதடிசக்கரங்கள் வகையுள்ளராணுவங்கள்
சேனைகளெல்லாந் திரளாகத்தான்கூட்டி
அந்தநல்லவேளையிலே ஆனதொருபொம்மணனும்
வாகுவலயமும் வளைதடிசக்கரமும்
வறியம்புநெறியம்பு ஈட்டியுங்கைபிடித்து
பஞ்சகல்யாணிபுரவி பாங்காகக்கொண்டுவந்தார்
பொம்மணநாய்க்கன் புரவிதனிலேறி
தலையாரிமுன்போகத் தனிப்பரியுப்பின்தொடர்ந்து
சேனைவருவதினால் செந்தூள்பறக்குதங்கே
தப்பட்டைகொம்பு தவில்முரசுதான்முழங்கி
யானையின்மேல்பேரிகை அதிர்ந்துமுழங்கிவர
வழியிலெதிராக வருவோரைக்கேட்கலுற்றார்
ஒற்றைக்குதிரை ஒருபெண்ணுமாண்பிள்ளை
கண்டாயோயிவ்வழியில் கண்மணியேதம்பியரே
அப்போது ஆட்டிடையன் அவன்கண்டசேதிதன்னை
வாருமையாசுவாமி வந்தவகைசொல்லுகிறேன்
கருங்கால்வழியாக கண்டேனொருகுதிரை
குதிரையின்மேலேயொரு கோதையரும்மன்னவனும்
இவர்களிரண்டுபேரும் இசைவாகப்போனார்கள்
அந்தநல்லசேதிதனை அடைவாகத்தான்கேட்டு
பொம்மணனுமப்போது போகிறான்வேகமுடன்
கருந்தூளுஞ்செந்தூளுங் கலந்துபறக்குதப்போ
காவேரியாற்றில் கண்டானேகூடாரம்
அதிலிறங்கிச்சேனை அலைகொட்டிருக்கிறதை
கூடாரத்திலிருந்த கோதையரும்வெளியில்வந்து
வடக்குமுகம்பார்த்தாள் வருகின்றசேனையைத்தான்
அலறியேபோய்விழுந்தாள் ஆணிமுத்துவீரன்மேல்
என்னடிபெண்ணேயென்று எழுந்துவெளியில்வந்து

பார்த்தான் வடக்குமுகம் பாந்துவருஞ்சேனைதனை
கண்டுமந்தவீரையனும் கன்னிமனந்தேற்ற
கூடாரத்தின்மேல் கொள்ளைகொள்ளையென்றுசொல்லி
வந்துநிறைந்தார்கள் வந்தசேனையனைத்தும்
பதினாயிரம்பேர்கள் பாங்குடனே அம்புதொட்டு
கூவியதுபோல் கொடியம்புதான்றொடுத்து
வெட்டவேணுமென்று வீரையன்மேல்வாரார்கள்

மதுரைவீரன் சண்டைக்குப் போகுதல்

கண்டுமேவீரையனுங் கடுங்கோபந்தானாகி
மீசைதுடிக்குதப்போ வெகுகோபங்கொள்ளுதப்போ
ஏறினான்குதிரையின்மேல் எடுத்தான்பெரியகத்தி
மன்னவனேயுங்கள் மாமனொருத்தனையும் [ள்
வெட்டாமல்விட்டுவிட வேணுமெனத்தெண்டனிட்டா
பைங்கிளியேபெண்மயிலே படுகளத்தில்ஒப்பாரி
உண்டாயித்தேசத்தி லுண்மையாய்ச்சொல்லவந்தாய்
என்றுசொல்லிமதுரையனும் எதிராளிசேனையிலே
ஆனைத்திரளதனில் ஆளிவந்துபாய்ந்ததுபோல்
சேனைத்தளத்தில் சிறுவேங்கைபாய்ந்ததுபோல்
வந்துவளைந்தானும் மட்டற்றசேனைகளை
சேனைகளெல்லாம் திரளாகவோடியங்கே
மாண்டுமடிகிறது மன்னனதுசேனையெல்லாம்
முன்வீச்சுக்காயிரம்பேர் முனைவீச்சுக்காயிரம்பேர்
இறந்துமடியுதப்போ எண்ணிறந்தசேனையெல்லாம்
பொய்மியால்நம்முயிர்தான் போகுதென்றுசொல்வார்க
என்றுபுலம்பி இறந்துமடியுதப்போ [ள்
புஷ்பமாய்வந்து பொழியுதுகாணண்டவன்மேல்
தொடர்ந்துபோய்வீரன் துடுக்கர்படையெல்லாம்
துண்டந்துண்டமாகத் துணித்தாராமப்போது
சாகீப்சலாமென்று தான்விழுந்தார்கோடிபடை
திருச்சினாப்பள்ளி தேசத்தையாளுகின்ற
விஜயரங்கசொக்கலிங்க வேந்தனதுராணுவங்களும்
கோட்டைக்கதவடைத்து கொத்தளத்தில்மேலிருந்து
வேடிக்கைபார்க்கிறார்கள் வேந்தன்படைதளமும்
சேனைதளங்களெல்லாஞ் சேதமாய்ப்போச்சுதென்று
மனதுகலங்கியப்போ மன்னவனுமேதுசொல்வான்

சக்கிலியன் தானுமப்போ தலையறுத்தான் சேனைகளை
கூட்டப்படைகளெல்லாம் கொன்றுகருவறுத்தான்
நாம்போய்விழுந்து நறுக்குவோம்சக்கிலியை
என்று நினைத்து ஏற்றமுள்ளபொம்மணனும்
புரவிதனிலேறிப் புறப்பட்டானப்போது
எதிர்கொண்டுவந்த எண்ணமற்றமாமனைத்தான்
பார்த்தங்கேபற்கடித்து பதறிப்போய்தான்விழுந்து
மாமனென்றுபாராமல் வாளாலேவீசிவிட்டான்
மாமன்விழுந்தபின்பு மதுரைமகாமுனியும்
தொட்டிப்பயல்களைத்தான் துரத்திக்கருவறுத்து
கத்திவரிசையெல்லாம் காவேரியிற்றானலம்பி
கொள்ளைகொண்டவீரையனும் கூடாரந்தானேக்கி
குலுங்கநடைநடந்து குஞ்சிரிப்புகொண்டுவந்து
அடுத்தாரைக்காக்கும் ஆணிமுத்துவீரையனும்
வர்ணமணிகூடாரம் வந்திருக்கும்வேளையிலே
ஏந்திழையுமப்போது என்தகப்பனெங்கேஎன்றாள்
உன்தகப்பன்தானும் ஒக்கமடிந்தாண்டி
என்றுசொல்லக்கேட்டு ஏற்றமுள்ளபொம்மியரும்
அலறியேபோய்விழுந்தாள் ஆனதொருபடுகளத்தில்
பொம்மணன்மேல்விழுந்து புலம்பியழுகலுற்றாள்
என்னாலேஉங்களுயிர் எமலோகஞ்சேர்ந்துதோ
பாவிமகளாலே படுகளத்தில்மடிந்தீரோ
என்னைவிட்டுநீங்கள் இருந்தரசுஆளாமல்
சேனைதளத்துடனே சீக்கிரமாய்ஆற்றில்வந்து
மடிந்தீரோமன்னர்களே மகாசேனையத்தனையும்
என்றுபுலம்பி ஏங்கியழுகலுற்றாள்
மங்கையரைத்தானெடுத்து மார்புடனேதானணைத்து
அழுகிறதைத்தானமர்த்தி அந்நேரம்வீரையனும்
திருச்சினப்பள்ளியிற்போய்சீக்கிரமாய்கட்டைகொண்டு
சந்தனக்கட்டையின்மேல் சதுராகஎடுத்துவைத்து
நீர்க்கடனும்தீக்கடனும் நீதியுள்ளமாமனுக்கு
வரிசையுடனேமுடித்து வளமயிலும்வீரனுந்தான்
காவேரிதீர்த்தத்தில் கனமாகத்தான்குளித்து
மங்கையரும்வீரையனும் வந்தார்கள்கூடாரம்
சாதங்கறிவகைகள் சமைத்தாரேஅந்நேரம்
படைத்தநல்லசாதத்தை பரிவாகவீரனுண்டான்

பைங்கிளியைப்பார்த்து பசியாறும்பெண்ணே என்றான்
உண்டுபசியாறி உத்தமியாள்பொம்மியரும்
இருவருங்கூடி ஏகாந்தமாயிருந்து
பாக்கிலேதாமருந்திப் பரிந்துவிளையாடி
என்னடிபொம்மியேநாம் இங்கிருக்கக்காரணமேன்
கூடாரந்தான்பிடுங்கி கோட்டைக்குச்சேர்வோமென்று
பொம்மியரும்வீரனுந்தான் புரவிதனிலேறி
திருச்சினாப்பள்ளிக்குச் சீக்கிரமாய்ப்போகையிலே

மதுரைவீரன் விஜயரங்கனிடத்தில் சம்பளத்துக்குப் போயிருத்தல்

கோட்டைக்குத்தலைவாசல் குறிக்காரர்தாமறிந்து
எந்தவூரென்று இதமாகத்தான்கேட்டார்
வடக்கேயிருந்து வருகிறோமென்றுசொல்லி
சேவகமில்லாமல் செம்மையாய்இங்குவந்தோம்
நல்லதென்றுசொல்லி இராஜனுக்குஅறிக்கையிட
விஜயரங்கசொக்கலிங்க வேந்தனதுகேட்டு
வந்ததொருசேவகனை வாசல்தடையில்லாமல்
கூட்டியிங்கேவாருமென்று கொப்பெனவேயுரைத்தார்
வீரனதைக்கேட்டு விருப்பமுடனேநடந்தான்
பொம்மியர்க்குத்தான்விடுதி பொங்கமுடனேயமர்த்தி
விடுதியில்விட்டு வேந்தனிடந்தான்போனான்
கண்டுதுரைஇராஜாவுங் காரணனைத்தான்பார்த்து
வாருங்களென்றுசொல்லி வரிசையுடன்நிறுத்தி
எந்தவூரெங்குவந்தீர் ஏதுவிஷயஞ்சொல்லுமென்றார்
வடதிசையில்நானிருந்து வந்தேனையாஉங்களண்டை
ஆனதொருசேவகத்தை அடைவாகத்தந்தீரானால்
அரண்மனைவாசலிலே அசையாமற்காத்திருப்பேன்
என்றுசொன்னவீரனுக்கு ஏற்றமுள்ளஇராஜாவும்
என்னகாண்சம்பளம் இயம்பென்றுதான்கேட்க
திங்களுக்கோராயிரம்பொன் திறமாகத்தரவேணும்
நல்லதென்றுசொல்லி நாய்க்கனுஞ்சம்மதித்து
ஆயிரஞ்சேவகர்க்கு அணித்தலைவனாகயிரு
உச்சிதமான உடுப்புகள்தான்கொடுத்தும்
இந்தப்படிவீரன் இருக்குமந்தவேளையிலே
யானையின்மேலேறி அலங்கஞ்சுற்றிவருகிறதும்

குதிரையின்மேலேறி கோட்டைசுற்றிவருகிறதும்
ஆருமறியாமல் அரண்மனைக்குப்போகிறதும்
வேடங்கள்பூண்டு வீதிசுற்றிவருகிறதும்
பதிவிரதைப்பெண்களைப் பாதுகாத்துவருகிறதும்
ஸ்ரீரங்கநாதரைச் சேவித்துவருகிறதும்
வேட்டைகளாடி வீடுவந்துசேர்கிறதும்
இப்படியாக இருக்குமந்தவேளையிலே
விஜயரங்கசொக்கலிங்க வேந்தன் துரைராஜன்மெச்சும்
தேசக்குறிக்காரர் தேசுகிருஷ்ணப்பனுந்தான்
பிள்ளைகளில்லையென்று பெருந்தவசுதானிருக்க
மாயனருளாலே வந்துதித்தாள்மங்கையரும்
புத்திரிபிறந்தவுடன் பூரித்துத்தானிருந்து
வேரூர் அரண்மனையை விசித்திரமாய்க்கட்டிவைத்து
மங்கையந்த அரண்மனையில் மகிழ்வாகத்தானிருந்தாள்
அரண்மனைக்குமுன்பாக ஆணிமுத்துவீரனுந்தான்
வருகிறபோது மருந்துபொடிவாசனையும்
வீசுவதைக்கண்டு வேலனையக்கண்ணும்
ஆரென்றுசொல்லி அவளெட்டித்தான்பார்த்தாள்
கன்னிஇளமயிலைக் கண்டவுடன்வீரனுமே
ஆகட்டுமென்றுசொல்லி அதட்டியேதானடந்தான்
கண்டாளேவீரன்றனை களிப்புடனேசொக்கியவள்
மோகித்திருந்து முத்தையன்மேலிச்சைகொண்டு
அன்னம்விரும்பாமல் அடைக்காயருந்தாமல்
எண்ணங்கொண்டேமிகவும் ஏங்கியவளிருக்க
பொம்மியருமப்போது போஜனங்கள்தான்படைக்க
சாப்பிட்டிளைப்பாறித் தனிச்சிங்கமதுரையனும்
நஞ்சுதின்றுநஞ்சறுக்கும் நடுச்சாமவேளையிலே
பகற்காலம்தான்மறைய பாவையரைத்தானிணைந்து
படுக்கையைவிட்டெழுந்து பாவையரண்மனைக்கு
ஆசாரவாசல் அரண்மனைவாசல்கடந்து
ஏறிமதில்கடந்து ஏந்திழையிடத்தில்வந்து
எதிராகவீரனுந்தான் இசைவாக நிற்கையிலே
நாய்க்கர்மகள்தானும் நல்லநித்திரைசெய்கையிலே
மதுரைவீரனணிந்த வாடையவள்மேல்வீச [து
பள்ளிகொண்டுதானிருக்கும் பைங்கிளியாள்தான்பார்த்
இந்தப்பொடிவாசனை ஏதுகாணென்றுசொல்லி

காலையில்கண்ட காரணனும்வந்தானோ
ஆரென்றுசொல்லி அறிந்துவரவேணுமென்று
பஞ்சணைமெத்தைவிட்டு பசுங்கிளியுந்தானெழுந்து
மாணிக்கப்பொற்கதவை மங்கையரும்போய்த்திறந்து
பார்க்குமளவில் பராக்கிரமவீரன் நிற்க
கண்டுமகிழ்ந்து கன்னிகையுமப்போது
மணவாளன் நிற்கிறதை மங்கையவள் தான்பார்த்து
மயங்கியேதான்விழுந்தாள் மங்கையவளப்போது
மாணிக்கக்கையாலே மங்கையரைத்தானெடுத்து
கச்சைப்புர-மையெடுத்துக் கன்னியர்க்குத்தானுமிட
சோகந்தெளிந்து தோகையருங்கூறலுற்றாள்
வாருங்கள் இராஜாவே வார்த்தைசொல்லக்கேளுமினி
என்றுசொல்லித்தானு மேந்திழையாளருகில்வந்தாள்
கட்டியணைத்தான் கனிவாயைமுத்தமிட்டான்
அடைக்காயும்வெற்றிலையும் அன்புடனே தாமருந்தி
சிரித்துவிளையாடி தேன்மொழியைத்தான்சேர்ந்து
தீராதஆவலெல்லாம் தீர்த்தானபிற்பாடு
மங்கையருமப்போது மகிழ்ச்சியுடன்தானெழுந்து
வீரையர்க்குத்தானும் வேண்டுமென்றபலகாரம்
அதிரசமுந்தேன்குழலும் ஆனசுகிவடையும்
தீவுச்சரக்குத் தேசத்துசாராயம் [வைத்தாள்
அத்தனையுங்கொண்டுவந்து ஆண்டவர்க்குமுன்னே
இத்தனைநேரம் இளைப்புடனே நீரிருந்தீர்
பசியாறுமென்றுசொல்லி பைங்கிளியும்தான்கூற
தென்மதுரைதானுஞ் சீக்கிரமாய்த்தான்புசித்து
அடைக்காயும்வெற்றிலையும் அன்புடனே தாமருந்தி
வாருமடிபெண்ணே வார்த்தைசொல்லக்கேளுமினி
என்றுசொல்லிவீரையனும் ஏந்திழையுங்கேட்கலுற்று
பெண்மயிலேநானும் போகிறேன் அரண்மனைக்கு [ள்
என்றுசொல்லித்தானும் எழுந்துநின்றாரப்போது
மன்னன்முகம்நோக்கி மங்கையருமேகனிவாய்
எப்போதுவருவீர்காணென்றுசொல்லிகேட்கனுற்றாள்
மாதமொருதினந்தான் மங்கையரே நான்வருவேன்
என்றுசொல்லிவீரையனும் இதமாய்வெளியில்வந்து
சுத்தாலேஏறி துருசாய்குதித்திறங்கி
ஆணிமுத்துவீரையனும் அசைந்துநடைநடந்து

வருகிறான்பொம்மியுட மாணிக்கமாளிகைக்கு
வீரையன் தானும் விடுதிவந்துசேர்ந்தானும்
பொம்மியருங்கண்டு பொங்கியேகோபங்கொண்டு
இந்நேரமட்டும் எங்கேபோய்வந்தீர்காண்
முறையுவரிசையில்லே மூர்க்கமுள்ளமன்னவனே
பெண்களைக்கண்டு பேய்போல்பறக்கிறீர்காண்
பாதகரேநானிதற்கோ பற்றிவந்தேனுன்பிறகே
என்றுசொல்லிப்பொம்மி எடுத்தெறிந்துபேசியபின்
ஏங்கிமுகம்வாடி எண்ணியழுகலுற்றாள்
தண்ணிவெறிக்கார னஞ்செயனும்தானுமப்போ
இத்தனைசலிப்பேண்டி ஏந்திழையேபொம்மியென்று
வாரியெடுத்து மார்போடுதானணைத்து
உன்னைவிட்டுநானும் ஒருவர்முகம்பார்த்ததில்லை
பைங்கிளியேயென்று பரவசமாய்ச்சொல்லியபின்
மனமும்தெளிந்துமப்பால் மங்கையரும்தானெழுந்து
சாதங்கறிவகைகள் தயவாகத்தான்படைத்தாள்
சாப்பிட்டிளைப்பாறி தக்கோலம்தானருந்தி
சிரித்துவிளையாடி சிரசகத்தானிருந்தார்
விஜயரங்கசொக்கலிங்க வேந்தன்மகாராஜாவின்
கட்டளைப்படிக்குநிதம் காத்திருக்கும்வேளையிலே
மன்னர்துரைஇராஜனுக்கு மதுரையிலேதானிருந்து
வெள்ளைதடிக்காரர் வீரனவுத்தரங்கள்
திருசாகத்தானெடுத்து தூதுவர்களப்போது
ஆசாரவாசல்வந்து அடைவுடனேகைதொழுது
உத்தரத்தைத்தான்கொடுத்தார்உத்தமனும்தான்வாங்கி
வந்ததொருஉத்தரத்தை வாசித்துப்பாருமென்றார்
மதுரையறுகாதம் வாழ்மதுரைமூக்காதம்
வைகைநதியும் வற்றாதபொய்கைகளும்
சொக்கரிடசந்நிதியும் சொர்ணமணிக்கோபுரமும்
மீனாட்சிசந்நிதியும் வெண்முத்தால்கோபுரமும்
புஷ்பவனமும் பொன்தாமரைக்குளமும்
இப்படியாயிருக்கும் எண்ணமற்றராஜ்ஜியத்தில்
தன்னரசுநாட்டுத் தனிக்காட்டுக்கள்ளரெல்லாம்
நாட்டிலுள்ளகள்ளரெல்லாம் நலமாகக்கூட்டமிட்டு
அழகர்தன்கோவிலுக்கு யாரொருவர்போனாலும்
கண்டவிடமெல்லாம் கள்ளர்உபத்திரவத்தால்

உழவுநடவுமில்லை உபத்திரவந்தன்னாலே
கொல்லரிடமுடிப்புக் கொடுக்கப்பயமாச்சு
இப்படியாகக்கள்ளர் இடக்குகள்செய்கிறார்கள்
என்றுசொல்லிநாய்க்க ரெழுதிவிட்டாருத்தரத்தை
விஜயரங்கசொக்கலிங்க வேந்தனுந்தான்கேட்டு
சபையிலுள்ளபேரையெல்லாம் தானும்முகம்பார்த்து
ஆர்போவீரென்றே யடைவுடனேகேட்டதற்கு
இராசன்முகம்நோக்கி நன்றாயெடுத்துரைப்பார்
அப்படிக்கொத்தகள்ளர் அஞ்சாதநாட்டாரை
வெட்டிக்கருவறுத்து விருதுபெற்றுவாரதற்கு
ஒருவராலாகாது உள்ளபடிசொல்லுகிறோம்
ஆயிரம்பொன்சேர்வை யானதொருவீரையனும்
சேனைதளங்கூட்டி தெற்கேயனுப்பிவைத்தால்
கள்ளர்பற்றுநாட்டையெல்லாங் கடுகவேதானறுத்து
சீக்கிரமாய்த்தான்வருவான் தெள்ளுமணிவீரையனும்
என்றுசொல்லியெல்லோரும் இதமாயுரைக்கலுற்றார்
அந்தநல்லசேதி யடைவுடனேதான்கேட்டு
விஜயரங்கசொக்கலிங்க வேந்தன் துரைராஜாவும்
வீரையனைத்தானழைத்துவெகுமதிகள்தான்கொடுத்து
ஐயாயிரஞ்சேனைதளம் அடைவுடனேதான்கூட்டி
தந்தார்சிவிகை தான்கொடுத்தார்வீரையற்கு
வெள்ளைக்குடையும் வெண்சாமரமுடனே [து
பதினெட்டுமேளவாத்தியம் பாங்குடனேதான்கொடுத்
பஞ்சவர்னடால்விருது பட்டாவுந்தான்கொடுத்தார்
அடைக்காயும்வெற்றிலையு மன்பாகத்தான்கொடுத்து
போய்வாருமென்றுசொல்லி போற்றிவிடைகொடுத்து
அநுக்கிரகம்பெற்றுகொண்டு ஆணிமுத்துவீரையனும்
ஏறினார்சிவிகையின்மேல் எண்ணமற்றசேனையுடன்
வெள்ளைக்குடைபிடிக்க வெண்சாமரம்வீச
பொம்மியரண்மனைக்குப் பொங்கமுடன்வாரார்காண்
கன்னியருப்பார்த்து களிப்பெய்துகொண்டாடி
என்றுமடையாத வெக்களிப்புதானடைந்து
பூரித்துபொம்மியரும் பொங்கமுடன்வீற்றிருந்தாள்
ஆணிமுத்துவீரையனும் அரண்மனையில்வந்திருந்தா
இப்படியாக இருக்கின்றவேளையிலே [ன்
விஜயரங்கசொக்கலிங்க வேந்தன் துரைராஜனுந்தான்

உக்கிராணந்தான் திறந்து உத்தமனார் வீரையர்க்கு
சேனைதளத்திற்குஞ் செல்லுமென்ற திரவியமும்
முத்துகடுக்கனென்றும் மோகனமாலையொன்றும்
சாலுவைகள்ரெண்டும் தார்வேந்தன் தானெடுத்து
கொல்லர்கையிலேகொடுத்து குணமுள்ளவீரனிடம்
கொண்டுவந்துகொல்லர் கொடுத்தார்காண்வீரையற்கு
வீரையனுமப்போது வெகுவாய்மனங்குளிர்ந்து
கொல்லரையனுப்பிவிட்டு குணமுள்ளவீரையனும்
கணக்கரைத்தானழைத்து கடுகவுரைக்கலுற்றான் [ர்
சேனைதளத்துக்கெல்லாம் செலவுக்குதான்கொடென்று
ஐந்துலட்சம்பொன்எடுத்து அவர்கையிலேகொடுத்து
கணக்கெழுதிவாருமென்று காரணனுமந்நேரம்
சம்பங்கியெண்ணெகொண்டு தலைமுழுகிமயிராற்றி
செங்கமலக்கையாலே சீக்கிரமாய்த்தான்முடித்து
சிவசிவாவென்றுசொல்லித் திருநீறுதானுமிட்டு
புனுகுசவ்வாது புண்ணியனுமேல்பூசி
கண்டவர்கள்தான்மகிழ கஸ்தூரிபொட்டுமிட்டு
போஜனமண்டபத்தே போய்ப்புகுந்தான்வீரையனும்
சாதங்கறிவகையும் தான்படைத்தாள்பொம்மியரும்
சாப்பிட்டிளைப்பாறி சரசமுற்றவீரையனும்
அடைக்காயும்வெற்றிலையு மன்பாகத்தானருந்தி
வாருமடிபெண்ணே வார்த்தைசொல்லக்கேளுமினி
மதுரையிற்கள்ளர்வந்து வழியிடக்குபண்ணுகிறார்
என்றுசொல்லி நாய்க்கரிதமுடனேயழைத்து
போய்வாருமென்று போற்றிவிடைகொடுத்தார்
ஆகையினாலே ஆரணங்கே நீர்தானும்
பயணமதாகிப் புறப்படு நீபைங்கிளியே
என்றுசொல்லிவீரையனும் எழுந்திருந்து அந்நேரம்
பொம்மியருங்கூட பொறுமையுடன்போகலுற்றாள்

மதுரைவீரனும் பொம்மியம்மாளும் புறப்படல்

சதுரங்கசேனையெனுந் தளங்களனைவோரும்
பயணமதாகப் பார்மீதில்முழக்கமிட்டார்
பல்லக்கின்மேலே பைங்கிளியுந்தானேற
ஏறினார்குதிரையின்மேல் எடுத்தார்பெரியகத்தி [ரை
படைக்குநல்லபார்த்தனைப்போல்பறந்தானும்தென்மது

மதுரை திசைநோக்கி மங்கம்மாள்சாலைவழி
ஆனையின்மேல்பேரிகை யதிரமுழங்கிவர
குதிரையின்மேல்டங்கா கூடமுழங்கிவர
தம்பட்டங்கொம்பு தவில்முரசுதானறைய
பஞ்சவர்னடால்விருது பக்கமெல்லாஞ்சூழ்ந்துவர
புண்ணியனார்வீரையற்குப் பூச்சக்கரக்குடை நிழற்ற
இருபுறமும்வெண் சாமரம் இன்பமுடன்வீசிவர
கட்டியங்கள்கூற கவிவாணர்பாடிவர
நடந்தான்காண் தென்திசையில் நாலுதிக்குந்தான திர
சேனைவருகிறதும் செந்தூள்பறக்கிறதும்
காடுமலைகடந்து கரியதொருசோலைவிட்டு
சில்லென்றகாடுவிட்டுச் செடிமலையுந்தான்கடந்து
மணப்பாறைவழிதனிலே வந்தடித்தார்கூடாரம்
கூடாரந்தானடித்து கோட்டைசலாதிவிட்டு
வீரையனும்வந்து விடுதியிற்றங்கியபின்
பொம்மியரும்வீரையனும் பொங்கமுடன்தானிருந்தார்
தேசத்திலுள்ள திரள்மன்னரத்தனையும்
பாளையக்காரர் படைமன்னர்வீருமாய்
வீரையனைக்காண வெகுமதியுந்தானெடுத்து
வந்துமேகண்டு வணங்கியேதெண்டனிட்டு
ஆரென்றுசொல்லி அன்பாகத்தான்கேட்டார்
பாளையக்காரனென்று பாங்குடனேசொல்லையிலே
எங்குவந்தீரென்று இதமுடனேதான்கேட்க
கள்ளருபத்திரவங்கள் கனமாயிருக்குதென்றார்
அஞ்சாதிருங்களென்று ஆதரவுசொல்லையிலே
பாளையங்களெல்லாம் பசியாயிறங்கினபின்
மணப்பாறைசுப்பையனு மங்கபதிநாய்க்கரும்
வீரையனைவந்துகண்டு வேந்தர்களுமப்போது
ஆணிமுத்துவீரையற்கு ஆனதொருராணுவுக்கும்
அரிசிபருப்புடனே ஆனபதார்த்தங்களுடன்
வீரையற்கும்பொம்மியற்கும் விருந்துசமைத்தார்கள்
பொம்மியரும்மதுரையனும் பொங்கமுடன்தான்புசித்
சாப்பிட்டிளைப்பாறி தாம்பூலம்தாமருந்தி [து
பள்ளிகொண்டாரிருவருமாய் பாங்கானமெத்தையிலே
கங்குல்விடிந்தவுடன் கதிரோனும்வந்துதித்தான்
பயணமென்றுசொல்லிப் பாரசின்னமூதலுற்றார்

தென்றிசையைநோக்கிச் சீக்கிரமாய்வருகையிலே
வேகமாய்வருகிறது வீரையன்சேனையென்று
தோராதலக்கையனுந திமபிகசைபூசசயனும்
இரண்டுதுரைமாரும் ஏற்றமுள்ளராணுவமுடன்
மாய்பூண்டுசோலையிலே வந்துயெதிரே நின்று
கைகுவித்துதெண்டனிட்டு கட்டளைக்குத்தாமிருந்தார்
வீரையனுமப்போ விரைவாகத்தானழைத்து
எங்குமிறங்கலா மென்றுசொல்லித்தான்கேட்டார்
அடியேங்கள்நாங்க ளறிந்தமட்டுஞ்சொல்லுகிறோம்
துவரங்குரிச்சுக்குத் துருசாகப்போய்ச்சேர்ந்தால்
தண்ணீர்சௌக்கியமூஞ் சாலைநல்லதோப்புகளும்
பேட்டைநல்லசாவடியும் பெரியகடைத்தெருவும்
ஊருக்குமேற்கே உயர்ந்தகிராமமுண்டு
பாளையந்தானிறங்கப் பதிவானயிடமுண்டு
என்றுசொல்லியப்போது ஏற்றமுடன்தானுரைத்தார்
நல்லதென்றுசொல்லி நடந்தான்காண்வீரையனும்
பாளையப்பட்டார் பாதைகொண்டுகாட்டலுற்றார்
சேனைப்படைத்தளமும் தீர்க்கமுள்ளவீரையனும்
துவரங்குரிச்சிக்குத் துருசாய்ப்போய்ச்சேர்ந்தார்
ஊருக்குதெற்கே வுயர்ந்திருக்கும்மேடையின்மேல்
அனுமந்தகூடாரம் அடைவாகத்தானடித்தார்
கோட்டைசலாதிவிட்டு கொள்ளைகொண்டவீரையனும்
விடுதியில்தானுமப்போ விருப்பாகத்தானிருந்தார்
அந்தநல்லவேளையிலே ஆனதொருலக்கையனும்
தம்பிக்கைபூச்சியனும் துரிதமுடன்வீரையற்கு
விதவிதமாகஉலுப்பைகள் விபரமாயனுப்பலுற்றார்
நெய்க்குடமுந்தயிர்க்குடமும் நேரானபாற்குடமும்
ஆட்டுக்கிடாக்களும் அடைவானபன்றிகளும்
கோழியுடன்காய்கறியும் கொள்ளைகொண்டவீரையற்கு
அத்தனையுமாள்பேரி லன்பாயெடுப்பித்து
எடுத்தங்கேசென்றிவற்றை எதிராகத்தான்வைத்து
இலக்கையனும்பூச்சியனும் இசைவாகக்கைதொழுதார்
கூடவேவகைதொழுது குணமுள்ள ரையனும்
வாருமென்றுசொல்லி வரிசையுடனேயழைத்து
இருவர்துரைமக்களுக்கு மின்பமொடுவீரையனும்
ஆளுக்கோர்சால்வை அன்பாய்ப்பரிசளித்து

இனிதாயுபசரித்து இருங்களென் றுவார்த்தைசொல்லி
மனங்குளிர்ந்து திரைமக்க ளமைதியுடனங்கிருந்து
வீரையற்கும்பொம்மையற்கும மேலானவிருந்துசெய்ய
சம்பாவரிசிகொண்டு சமைத்தார்கள்காய்கறிகள்
ஆட்டுக்கறிகள் ஆனபலகாரமுடன்
அளவில்லாக்கறிகள் அதிகசுவையாய்ச்சமைத்தே
பாவையற்கும்வீரனுக்கும் படைத்தார்களன்னம்பல
உண்டுபசியாறி உட்கார்ந்திளைப்பாறி
தாம்பூலந்தான்தரித்துச் சயனித்தார்பூவணைமேல்
பூச்சையனும்லக்கையனும் பொழுதுவிடியுமட்டும்
கண்ணையிமைகாப்பதுபோற் காத்திருந்தார்கடிதாக
அன்பர்வினைபோல் அகலவிருட்கூட்டம்
பச்சையிலைமேற் பரிதியும்வந்துதித்தான்
தூக்கமுழித்துத் திடுக்கென்றெழுந்திருந்து
தந்தந்துலக்கித் தடாகத்தில் நீராடிச்
சிவசிவாவென்று திருநீறுகாப்புமிட்டு
வண்டத்துலுக்கரைப்போல் வடிவுள்ளபாகைகட்டி
அங்கிநிசாறுதொட்டு அடைவுடனேகச்சைகட்டி
பதினெட்டுஆயுதமும் பாங்குடனேதான்பிடித்து
கூடாரந்தான்பிடுங்கி கொள்ளைகொண்டவீரனுமே
ஏறினார்வாசியின்மேல் எடுத்தார்பெருங்குடையை
பயணம்புறப்பட்டார் பரிவாகத்தன்னோடு
ஊதினார்சின்னம் உலகமெல்லாந்தானதிர
வீரன்தன்சேனை வெகுவாய்வருகுதுகாண்
நத்தத்துலிங்கையனும் நாழிகையிற்றான்கேட்டு
வீடுமெழுகி விருப்பமுடன்கோலமிட்டு
தோரணங்கட்டி சுபகோலந்தானுமிட்டு
விரையற்கும்பொம்மியற்கும் விடுதியலங்கரித்து
வீதிக்குவீதி விதமாகப்பந்தலிட்டு
படியரிசியாவற்றும் பாங்குடனேதான்கொடுத்து
அடிபணிந்துவீரனுக்கு அடைவுடனேதெண்டனிட்
கண்டுமனமகிழ்ந்து கனப்பிரியமுண்டாகி [டார்
வாருமென்றுசொல்லி வாஞ்சையுடன்தானழைத்து
மோகனமாலையொன்றும் முத்துக்கடுக்கனொன்றும்
வெகுமதியாகக்கொடுக்க வீரையனுமப்போது
நத்தத்துவீதியிலே நலமாகப்போயிறங்கி

சந்தோஷப்பட்டுத் தனஞ்சயனும்வீற்றிருந்தார்
நத்தத்துலிங்கையனும் நல்விருந்துதான்செய்தான்
பொல்லாததரித்திரமாம் பின்னிரவுபோனவுடன்
நல்லசம்பத்தென்னும் நறுமலராள்வந்துதிக்கும்
மற்றுநாள்காலையிலே மன்னனெழுந்திருந்து
தந்தசுத்திசெய்து தானணிந்தான்வெண்ணீறு
பாளையத்தைஎச்சரித்தான் படைமூாசுதானதிர்ந்து
மதுரையைநோக்கி மனமகிழ்ந்துசெய்கையிலே
சதுரங்கசேனைகளும் சதுராகத்தானடந்து
காமேலைகடந்து கடியவனங்கடந்து
திருமலைநாய்க்கரிடச் சீமைதனைத்தொடர்ந்து
வைகைக்கரையோரம் வந்திறங்கியப்போது
அண்டமுகடதிர அடித்தார்கள்கூடாரம்
பொம்மியருந்தானும் பொங்கமுடன்வீற்றிருந்தார்
கூடாரம்வந்தபின்பு கோட்டைத்தலையாரி
திருமலைநாய்க்கன்முன் திடீரென்றுஓடிவந்து
வடக்கேயிருந்து வருகுதையாசேனைதளம்
மாற்றான்படையோ மறுமன்னர்தன்படையோ
என்றுசொல்லித்தலையாரி இணக்கமாகத்தானின்றான்
திருமலைநாய்க்கரும் சேதிதனைக்கேட்டு
ஆராலென்ன ஆகட்டுமென்றுசொல்லி
அருகாகபிராமணரை அன்பாகத்தானழைத்து
ஆரென்றுசொல்லி அறிந்துமெள்ளவாருமென்றார்
அப்போதேவேதியரும் ஆண்சிங்கவீரனிடம்
போனார்கள்சேதிதன்னைப் பூராயமாய்த்தெரிந்து
வேதியரைத்தானழைத்து வீரனுஞ்சொல்லலுற்றார்
விஜயரங்கசொக்கலிங்க வேந்தனெனையழைத்து
மதுரைக்குட்சென்று வண்டரெனுங்கள்ளர்களை
மடக்கிவாவென்று மதித்துயெனையனுப்ப
ஆகையினாலேயிங்கு அடைவுடனேவந்தேனென்றார்
சீக்கிரமாயுத்தரத்தை திருமலைநாய்க்கர்முன்
சொன்னார்கள்அந்நேரம் துரைநாய்க்கர்தான்கேட்டு
வீரனுக்குவேண்டும் விடுதியெல்லாமமைத்து
வாசல்பிரதானி வரிசைபெற்றசாம்புவனை
எதிராகப்போய்நின்று யேந்தலெனும்வீரனைத்தான்
அழைத்துடனேவாருமென்று ஆக்யாபித்தேயனுப்ப

சாம்புவனுமப்போது தார்வேந்தர்சொற்கேட்டு
எழுந்திருந்துவாசியின்மே லேறிப்போனனுடனே
குதிரைப்பரிவாரங் கோடிதளப்பின்றொடர
பதினெட்டுமேளம் பண்பாயறைந்துவர
வெள்ளைத்துகில்விசிறி விதமுடனே தானடந்தான்
சேனுபதியுடனே சேனைதளம்வருகுதென்று
வீரனுமப்போது வெகுவாய்மனமகிழ்ந்து
ஆனையின்மிதவுதான் அழகாகவேயியற்றி
மத்தகஜந்தொட்டு மகாவீரன்பொம்மியரும்
ஏறியுட்கார்ந்து இனிதாய்வழிநடக்க
ஆணிமுத்துவீரனுமே அரண்மனையில்வந்திறங்கி
சம்பங்கியெண்ணையால் தலைமுழுகிமயிராற்றி
கோதிமயிரைக் குடுமிகட்டச்சிக்கறுத்து
சீரானநெற்றிதனில் திருநீறுதானணிந்து
கெந்தமும்கஸ்தூரி கீரினுர்மார்புதனில்
கட்டுவர்க்கந்தானணிந்து காரணனுமப்போது
அறுசுவையோடன்ன மருந்தியிளைப்பாறி
ஏலம்லவங்கமுடன் இளம்வெற்றிலைப்பாக்கும்
தரித்துவிளையாடி சரசபொம்மியைப்பார்த்து
வாருமடிபெண்ணே ஒரு வார்த்தைசொல்லக்கேளுமடி
கள்ளரைக்கொல்ல கட்டளைகளிட்டாரடி
திருமலைநாயகராது தெரிசனஞ்செய்வதற்கு
போய்வாரேனென்று பொன்பல்லக்கேறிப்போய்
திருமலைநாய்க்கருதான் சிறப்பாய்கொலுவிருக்கும்
ஆசாரவாசல்வழி அழகாகத்தான்கடந்து

மதுரைவீரன் திருமலைநாய்க்கரைக் காணல்

பல்லக்குவிட்டிறங்கி பாராளும்வீரனுந்தான்
திருமலைநாய்க்கரைத்தான் சேவித்துக்கொண்டுநின்று
கூடவேநாய்க்கருந்தான் கும்பிட்டுத்தானெழுந்து [ன்
பக்கமிருந்துகொண்டு பண்பாகவார்த்தைசொல்லி
தன்னரசுநாட்டு தனிக்காட்டுக்கள்ளரெல்லாம்
மதிரைக்கடைத்தெருவைவந்துமெள்ளகொள்ளையிட்டு
தாலிமுதல்சேனையெல்லாம் தாங்கள்பறிப்பதனுல்
விஜயரங்கசொக்கலிங்க வேந்தன்துரைராசனுக்கு
எழுதிவிட்டபடியே யியற்கையுள்ளராஜனுமே

உம்மையனுப்பினதால் உத்தமனே நீர்வந்திர்
கள்ளர்தளங்கள் கருவையறுத்துவாரும்
என்றுநாய்க்கன்சொல்ல இணங்கியவீரனுமே
பட்சத்தினத்திலே பட்சமில்லாக்கள்ளரைத்தான்
வெட்டிக்கருவறுத்து வெற்றிகொண்டுவாரேனென்றா
நாய்க்கரதுகேட்டு நன்றாய்மனங்குளிர்ந்து [ன்
வீரனுக்குத்தக்க வெகுமதிதனைக்கொடுத்து
அடைக்காயும்வெற்றிலையு மன்பாகத்தான்கொடுத்து
அரண்மனைக்குப்போவென் றனுப்பிமுன்னர் வீரனைத்தான்
அரண்மனையில்வீரனுந் தானடைவுடனேவீற்றிருந்தா
அன்றிரவுநீங்கி ஆதித்தன்வந்துதித்தான் [ன்

மதுரைவீரன் கள்ளர்களை யடக்கல்

வீரனெழுந்திருந்து விடியற்காலக்கடனை
எல்லாமுடித்து நகரெங்குமுலாத்திவந்து
சாப்பிட்டிளைப்பாறிச் சாமிதுரைவீரனுந்தான்
சாயங்காலந்தீவட்டித் தான்போட்டுக்கொண்டுமவன்
சொக்கரிடசந்நிதிக்குத் துருசாகத்தானேகி
தீபாராதனைவேளைக்குத் தினம்போய்த்தரிசித்து
வருகிறநாளையிலே மலைத்திருடரெல்லோரும்
கூட்டமிட்டுவளைதடியைக் கொண்டுபுறப்பட்டு
மதுரைக்கடைவீதி வந்துநுழைந்துகொண்டு
காசுபணம்நாணயத்தைக் கணக்கவேகொள்ளையிட
பட்டணத்திலுள்ள பரிசனங்களெல்லோரும்
கோவென்றசத்தங் கூக்குரலுந்தானுமிட
நகரத்தலையாரி நாட்டமுடனோடிவந்து
வீரனுடனேசொன்னான் வீரனுமப்போது
இணக்கமுள்ளபொம்மியற்கு இதுசேதியைச்சொல்லி
குதிரைமேலேறிக் கூராயுதந்தரித்து
சேனைதளத்துடனே சிறப்பாகவேசென்று
வடக்குநல்லவாசலிலே வகையுடனேதானடந்தான்
நலமுடனேவீரனுமே நடந்தான்காணம்மானை
பொல்லாதவீரனுந்தான் போர்செய்யக்கோபித்து
பட்டாயுருவிகொண்டு பதட்டமுடன்கள்ளரின்மேல்
பாய்ந்தான்குதித்தான் பதிவிருந்துதானமைத்து
வீசினான்கள்ளர்களை வீராதிவீரனுந்தான்

முன்வீச்சுக்காயிரம்பேர் முனைவீச்சுக்காயிரம்பேர்
இந்தப்படிக்கு இறக்கடித்தான்வீரனுந்தான்
தன்னரசுநாட்டு தனிக்காட்டுகள்ளர்களும்
கொக்கரித்துசேனைதளம் கோடிபடைதான்வந்து
ஈட்டிக்கோலாலே எதிர்த்தார்கள்வீரையன்மேல்
கண்கள்சிவந்து கடுங்கோபந்தான்கொண்டு
வாகுநல்லசமுதாடு வண்மையுடன்றான்பூண்டு
யானைக்கூட்டத்தில் யாளிவந்துபாய்ந்ததுபோல்
பெ[illegible]ம்பாதவீரன பூர்த்தியாய்வீசலுற்றான்
கள்ளர்படைகளெல்லாம் கலங்கியேமெய்மறந்து
மெய்சோர்ந்துவிழுவாரும் விதிவசமோஎன்பாரும்
ஆதிசிவனுக்கு அபயமென்றுவிழுவாரும்
ஈட்டிக்கோல்வைத்தபடி இறந்துமடிவாரும்
அச்சமற்றநாட்டுக் கழிவுவந்துநேர்ந்ததென்றும்
இன்றுமுடிந்ததுகா ணெங்கள்பலமெல்லாம்
கள்ளரெல்லாம்புலம்பிக் கைசோர்ந்துவிழுந்தார்கள்
இப்படியாக இருக்குமந்தவேளையிலே
கள்ளர்படைசேனையெல்லாங் கருவறுத்தவீரன்றன்னை
தேவரெல்லாங்கண்டு சிறப்புடனேபார்த்திருந்தார்
நாலுதிசைமெச்சவீரன் நற்கொலுவில்தானிருந்து
வெள்ளானைமீதேறி வெற்றிகொண்டுவாரார்காண்
பஞ்சவர்ணடால்விருது பக்கமேசூழ்ந்துவர
நாகசுரமேளம் நாட்டியப்பெண் ஆடிவர
மதுரைதிசைநோக்கி வாரார்காணம்மானை
கள்ளர்பற்றுநாட்டையெல்லாம் கடையாய்ப்பறக்கவிட் [டு
சகலசம்பிரமத்துடன் சாமிமுத்துவீரையரும்
வருகிறாரென்று வகையுள்ள தூதர்களும்
திருமலைநாய்க்கர் கொலுசெய்யுமண்டபத்தில்வந்து
சேதிதனையெல்லாஞ் செப்பலுற்றாரந்நேரம்
திருமலைநாய்க்கருஞ் செவிகொடுத்துத்தான்கேட்டு
சந்தோஷப்பட்டுத் தாதியரைக்கூப்பிட்டார்
தேனாட்சிமீனாட்சி செண்பகப்பூநாச்சியரே
பச்சைநிறத்தாளே பவளக்கொடியாளே
மாசிலாப்பத்தினியாள் வானத்தருந்ததியாள்
இந்தப்படிக்கு இயல்பானதாதியரும்
ஆயிரந்தாதியரை அன்பாயழைத்துவர

வெற்றிகொள்வீரருக்கு மேல்திருஷ்டிகழிக்க
ஆலாத்திசோடித்து அடைவுடனேதானடந்து
எதிர்கொண்டுபோவென்று எஜமானனுப்பவேதான்
அழகுரத்தினம்பதித்த ஆலாத்திசோடித்து
ஆணிமுத்துவீரனுக்கு ஆலாத்திசுற்றினார்கள் [ருன்
அந்தமுள்ளவெள்ளையின்மேலாசைகொண்டுவீரையன்
யானையைவிட்டிறங்கி அரண்மனைக்குள்ளேசென்று
திருமலைநாயக்கர்தனைச் சிறப்பாகவந்துகண்டார்
அந்தநல்லநாயக்கனும் அன்புடனேவீரனுக்கு
கைலாகுதான்கொடுத்து களிப்புட[illegible]
சிங்காசனத்தருகே சிறப்பாகயிருக்கவைத்து
அடைக்காயும்வெற்றிலையும் அன்புடனேதான்கொடுத்
கள்ளர்பற்றுநாட்டை கருவறுத்துவந்தீரே [து
உம்மைப்போல்தேசத்தில் ஒருவரையுங்கண்டதில்லை
இளைப்போடிருக்கின்றீர் ஏற்றமுள்ளவீரையனே
காலையிலேநாமே கலந்துவசனிப்போம்
என்றுசொல்லி நாய்க்கர் இசைவாகத்தானனுப்ப
நல்லதென்றுவீரையனும் நாய்க்கரைத்தான்றொழுது
அரண்மனைவாசல்விட்டு அடைவாகத்தானடந்து
யானைமேலேறி ஆணிமுத்துவீரையனும் [து
பொம்மியரண்மனைக்குப் பொறுமையுடன்போய்ச்சேர்ந்
கட்டுவர்க்கந்தானவிழ்த்துக் காரணனும்அந்நேரம்
வெந்நீரினாலே வீரையனும்ஸ்நானம்செய்து
கோதிமயிராற்றிக் கோணமல்சிக்கறுத்து
வாரிமுடித்து வகையுடனேவேஷ்டிகட்டி
சிவசிவாவென்றுசொல்லித் திருநீறுதானுமிட்டு
உண்டுபசியாறி உத்தமனார்வீரனுந்தான்
அடைக்காயும்வெற்றிலையும் அன்புடனேதாமருந்தி
பஞ்சணைமெத்தையின்மேல் படுத்துஎழுந்தவுடன்
ஆலாத்திபெண்களிலே ஆனதொருவெள்ளையின்மேல்
தீராதஆசைகொண்டு சீக்கிரமாயெழுந்திருந்து
கட்டுவர்க்கந்தானுடுத்திக் கனகப்பணிபூண்டு
சீவிநல்லகொண்டையிட்டுச் சிங்காரமாய்நடந்து
கோட்டையின்மேலேறிக் குதித்தான்காணம்மானை
வெள்ளையம்மாள்தன்விடுதி வேகமுடனேக்கியவன்
அங்கயற்கணம்மன் அடிபணியும்வெள்ளையம்மாள்

மீனாட்சிசந்நிதிக்கு முன்பாகமாளிகையில்
தூங்குமஞ்சக்கட்டில் துலங்கவலங்கரித்து [ம்
பஞ்சணைமெத்தையின்மேற் பைங்கிளியாள்வெள்ளையரு
நினைவுதெரியாமல் நித்திரைசெய்கையிலே
உல்லாசமாக ஒயிலழகர்தென்மதுரை
விதிப்பயனை எண்ணாமல் மெல்லியர்மேலாசைகொண்டு
மதிலேறித்தான்குதித்து மண்டபமுந்தான்கடந்து
பத்தினியாள்பள்ளிகொண்ட பாரயிடந்தனில்
இருந்து நினைத்தான் எண்ணாற்றுகாளையவன்
கா[illegible]முறல் தையலெழுந்திருந்து
கூவென்றால்வெள்ளையருங் கூடிடுவார்மாதரெல்லாம்
என்றுபலவாறாய் எண்ணிஏக்கமுற்று
முருகன் துணையென்று மூர்க்கமுள்ளவீரனுமே
தோளின்மீதிருந்த துப்பட்டிகீழ்பரப்பி
மெள்ள அசையாமல் மெல்லியரைத் தூக்கிவைத்து
கட்டியிறுக்கிக் கைலாகுகொண்டு தூக்கி
மாளிகையும்விட்டு மண்டபத்தைத்தான்கடந்து
தானிருக்குங்கோட்டையிற் றாண்டிகுதிக்கையிலே
வேவுகாரர்கள்ளரென்று வீரையனைத்தான்பிடித்து
ஆரென்றுசொல்லி அதட்டியவர்தான்கேட்டு
பத்தினியைக்கொண்டுவந்த பாவம்பலித்ததென்று
ஏங்கிமுகம்வாடி என்னசொல்லப்போறோமென்று
ஒன்றுஞ்சொல்லாமல் ஊமைபோல்தானிருக்க
திருமலைநாய்க்கருக்கு சேதிசொல்லிவாருமென்று
அனுப்பிவைத்தார் தூதுவனை ஆனதொருசேவகனும்
தூதுவருமப்போது துருசாகத்தானோடி
ஆசாரவாசல்நின்று அடைவுடனேசொல்லலுற்றார்
திருமலைநாய்க்கர் சேதிதனைத்தான்கேட்டு
கள்ளனை இங்குகாணக் கொண்டுவாவென்றுசொல்ல
கட்டளையிட்டபடி காவலர்களோடிவந்து
கள்ளனெனும்வீரையனை கட்டியமூட்டையுடன்
நாய்க்கர்முன்கொண்டுவந்து நடுநீதிகேட்கலுற்றார்
திருமலைநாய்க்கருந்தான் திருடன்மூட்டையைத்திறந்து
பார்க்கும்போதங்கே பாவைவெள்ளம்மையென்று
கண்டவனைத்தானிறுத்தி கள்ளனைக்குற்றத்தினால்
கானகத்திற்கொண்டுபோய் கைகாலைவாங்குமென்றார்



மதுரைவீரசுவாமி வெள்ளையம்மனை சிறையெடுத்தது

காவலருங்கள்ளனைத்தான்காட்டில்கொண்டுபோயவனை
கைகாலைவெட்டிவிட்டு காவலாள்வந்துவிட்டார்
வீரனுந்தன்னுடைய விதிதனைத்தானினைந்து
ஆதிசிவன்மாயவர்க்கு அபயமென்றுதான்சொல்லி
எண்ணுதுமெண்ணி இருக்குமந்தவேளையிலே
அப்போதுவெள்ளையரும் அசந்துநித்திரைதெளிந்து
பார்க்கவேவீரன் பக்குவமாய்நின்றிருக்க
கண்டவுடன்யோசித்து காரிழையுஞ்சொல்லுகிருள்
நானேபதிவிரதை நன்மையறியாமல்
தொட்டுஎனையெடுத்துத் தூக்கியேவந்ததினல்
இனியெனக்குநீபுருஷன் என்பதற்கோரையமில்லை
கோவேஇனியுந்தன் கூடவேநான்வருவேன்
உன்துக்கம்என்துக்கம் ஒன்றல்லவேறில்லை
ஒற்றுமையாகி உயிரைவிடுவேன்காண்
என்றுதிடமாக இயம்பினுள்வெள்ளையரும் [து
இவள்சொல்லும்சொற்கேட்டு இருந்தவர்களப்பொழு
ஆணிமுத்துவீரனென்று அனைவோருந்தாமறிந்து
உம்மையின்னுனென்று உண்மையறியாமல்
கைகாலறுத்துவிட்ட காரணத்துக்கென்னசெய்வோம்
என்றுசொல்லிச்சேவகர்கள் இணங்கிவணங்கலுற்ருர்
காலில்விழுந்து கதறியழுகலுற்ருர்
அழுதசத்தந்தான்கேட்டு ஆரணங்குபொம்மியரும்
அவரோஇவரோ அறிந்துவருவோமென்று
அன்னம்போலேநடந்து அருகில்வந்துதானின்று
வீரையனைத்தான்பார்த்து விம்மிவிம்மித்தானழுது
பாதகாநானிதற்கோ பற்றிவந்தேனுன்பிறகே
கால்கையறுப்புண்டிருக்கக் காணவோவந்தேனுன்
எழுத்தையறியாமல் எண்ணினேன்கோடிசிந்தை
ஆண்டவனேயுந்தனுக்கு அசடுவந்தவாறேது
மன்னவனேயுந்தனையும் வழிமறிப்பாருண்டோதான்
என்றுசொல்லிபொம்மியரும் ஏங்கிவிசனமுற்ருள்
புருஷனும்வாய்திறந்து பொம்மிக்குச்சொல்லலுற்ருன்
ஆதிசிவன்பிர்மா அன்புள்ளமாயனுமே
கூட்டிஎழுதினதைக் குறைப்பாரோபெண்ணரசே
எழுத்தையழிக்க எவரால்முடியுந்தான்
சூரியகுலத்துதித்து தோற்றமுடன்வீற்றிருந்தேன்

மாறுபடாவம்மிசத்தில் வந்துபிறந்தேன்காண்
பொம்மியரேநாளும் பூமியிலிருப்பதில்லே
மீனாட்சிபொற்பதத்தை விருப்பமுடன்சேர்வதன்றி
அரைநொடியும்நானிருக்க அதிகாரமில்லேயடி
ஆரணங்குபொம்மி அருஞ்சேதிதான்கேட்டு
மன்னவனேஉன்னேவிட்டு மண்மேலிருப்பதில்லே
கூடவருவேன்காண் கொள்ளேகொண்டராஜாவே
என்றுசொல்லிப்பொம்மி இதக்கமாய்த்தானடந்து
வைகைநதியில் வனமயிலாள்ஸ்நானம்பண்ணி
கூந்தலுதறியங்கே கோடாலிமுடிதான்போட்டு
கூறையுடுத்திக் கோலப்பணிபூண்டு
சிவசிவாவென்றுசொல்லித் திருநீறுதானுமிட்டு
எலுமிச்சங்காய்கையில் ஏந்திக்கொண்டுதானடந்து
அம்மாமீனாட்சி அடியாளும்வாரேனம்மா
சிவசிவாசொக்கலிங்கர் சீர்பாதங்காணவென்று
பயணம்பயணமென்று பைங்கிளியுந்தானடந்து
வீரரிருக்குமிட மேவியேதான்சேர்ந்தாள்
அந்தவிதமாயிருக்கும் அவ்வேளேதன்னிலே
வெள்ளேயரும்பார்த்து விதவிதமாய்த்தானினேத்து
என்னெருபெண்ணுலே இடியேதுவீரனுக்கு
சொல்லியபொல்லாங்கு சுத்தமாய்வந்ததினுல்
திருமலேநாய்க்கருக்குச் சேதிதனேச்சொல்வோமென்று
வாடியமனதுடனே வந்துநின்றுசொல்லவேதான்
திருமலேநாய்க்கர் சேதிதனேக்கேட்டு
அருமையுள்ளபிள்ளேக்கு அசடுவந்துநேர்ந்ததென்று
ஆசாரவாசல்மட்டும் அலறியேதான்புரண்டு
ஆடைகலேய ஆபரணந்தான்புரள
ஓட்டமாய்ஓடிவந்து உத்தமனேத்தான்பார்த்து
அப்பாமகனேயென்று அலறியேதானழுது
வெள்ளேயரைவேணுமென்று விரும்பினேக்கேட்டால்
கோதைமயிலேக் கூட்டிவந்துதாரேனே
எந்தனதுபெண்ணே இஷ்டமுடன்கேட்டாலும்
கல்யாணந்தான்முடித்து கண்ணுலேபாரேனே
நான்தாண்டாவீரனென்று நலமுடனேசொல்லாமல்
பேசாமலிருந்ததினுல் பிழைமோசம்வந்ததுகாண்
என்றுசொல்லிநாய்க்கர் ஏங்கிமுகம்வாடி

மீனாட்சிசந்நிதிக்கு விருப்பமுடன்சென்றேகி
உத்தரவுதான்கேட்டு ஒருநொடியில்நான்வருவேன்
என்றுசொல்லியப்போது இசைவுடனேபோனார்கள்
சொக்கர்திருவாலயத்தில் துருசாகப்போய்ப்புகுந்து
முக்கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டு
திரிபுரமெரித்தவர்தன் தேவிபரமேஸ்வரியே
வீரனுக்குவந்த விதிப்பயனைத்திருமம்மா
கைகால்வளர்ந்து கடுகவெழுந்திருக்க
வேண்டுமம்மாதாயே வேதாந்தநாயகியே
என்றுசொல்லநாய்க்கர் ஈஸ்வரியுந்தான்பார்த்து
கால்கையுந்தான்வளரக் கட்டளையுமிட்டாள்காண்
திருமலைநாய்க்கருந் திரும்பிவருவதற்குள்
மீனாட்சிகிருபையினால் வீரனுக்குமுன்போல
கால்கையுந்தான்வளர்ந்து கடுகஎழுந்திருந்து
திருமலைநாய்க்கர்முன்னே சீக்கிரமாய்ஓடிவந்து
வாருமையாராஜாவே வார்த்தைசொல்லக்கேளுமையா
மாறுபடாவம்மிசத்தில் வந்துபிறந்தேன்காண்
மாறுபடாமேனியிலே மாறுபடவாச்சுதுகாண்
பூவையாலென்னுயிர் பொன்னுலகம்போகுதையா
அன்றுஎனக்கு அயனெழுத்துப்படியே
வாய்த்ததென்றுவீரன் வண்மையுடனிருக்க
காதினாற்கேட்டு கண்ணீர்விட்டார்நாய்க்கரும்
வாழ்வும்பெருஞ்செல்வ மாயமிதுராஜாவே
நீரின்மேற்குமிழி நிலைமையற்றவாழ்க்கையிது
என்றுஇருந்தாலும் இறப்பதுநிச்சயந்தான்
சலித்துநீர்தானழுக தர்மமோராஜாவே
என்றுசொல்லிவீரனுமே இவ்வண்ணந்தேறிநின்றான்
பெண்களிருவருமே பிரியமாய்த்தீக்குதிக்க
நற்சவுக்கமாக நலமானதீக்குழியை
உண்டுபண்ணிவைக்கநீ உத்தாரஞ்சொல்லுமையா
திருமலைநாய்க்கருஞ் சேதிஇதுவறிந்து
வைகைக்குத்தான்போய் மாந்தோப்புக்குட்புகுந்து
தீக்குழிக்குஆன செம்மையுள்ளதாவதனை
கண்டுகுறித்துக் கடுகவேவெட்டிவைத்து
சந்தனக்கட்டைகொண்டு சதுராகத்தான்பரப்பி
தீக்குழியைச்சுற்றி ஜெயமங்களஞ்சொல்லி

வேதியரைத்தானழைத்து விதியாகச்செய்யென்றார்
ஆலாத்திசுற்றும்பெண் ணானதொருவெள்ளையரும்
பொன்னான திருமேனி பொம்மியருங்கூடவேதான்
ஏற்றமுள்ளவீரனுமே இருவரையுந்தானழைத்து
அன்னதானம்சொர்னதானம் அன்பாகச்செய்வித்து
கோதானம்பூதானங் கோதையரால்செய்வித்து
காரிகைநீங்களிருவர் கைலாயஞ்சேருமென்றார்
காதினால்கேட்டு கன்னிகைகள்தானுமப்போ
பூரித்துமேனி பொங்கிஇருவருந்தான்
பூண்டிருந்தஆபரணம் பொரிபொரியாய்எறிபரக்க
சந்தோஷமாயிருவர் சாமிமுத்துபாதத்தில்
அடைவுடனேதெண்டனிட்டு அன்பாய்இருபேரும்
இருவருந்தெய்வத்தை இதமாகவேதொழுது
சுற்றிவந்துதீக்குழியை சுத்தமனதுடனே
சந்தோஷமாகவேதான் சலியாமலேகுதித்தார்
தேவாதிதேவரெல்லாந் திட்டமுடனேபார்த்தே
ஆகாசகந்தருவர் அனைவோரும்பூச்சொரிய
தேவதுந்துமிதானுஞ் சீக்கிரமாய்த்தான்முழங்க
தீக்குழியைவீரனுமே சீக்கிரமாய்த்தான்மூட்டி
சடங்குகளெல்லாந் சதிராகத்தான்முடித்து
ஸ்நானமதுசெய்தபின்பு தயவாய்ப்பிராமணர்க்கு
வஸ்திரங்காசுபணம் வண்மையாய்த்தான்கொடுத்து
பொற்றாமரைக்குளத்தில் பொறுமையுடன்போயிறங்கி
கோடாலிமுடியவிழ்த்து குதித்துமேஸ்நானஞ்செய்து
சிவசிவாவென்று திருநீறுதானுமிட்டு
சந்தனம்புனுகுஞ் சவ்வாதுடன்கதப்பம்
பூசிதிருமேனியெங்கும் பொங்கமுடன்தானணிந்து
மிதியடியும்பூண்டுமேல் ருத்ராக்ஷந்தாமணிந்து
என்தாயேமீனாக்ஷி ஈஸ்வரியேஎன்றுசொல்லி
காளைமுத்துவீரனுமே கடுகெனவேதான்வந்து
ஆதிசிவனேயென்று அன்புடனேதான்வந்து
மீனாட்சிசன்னதிமுன் வீரையனும்வந்துநின்று
மூக்கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டு
திருமலைநாய்க்கர்தனை திரும்பிமுகம்பார்த்து
வாருமென்றுசொல்லி வண்மையுடன்தானழைத்து
மீனாட்சிபொற்பாதம் விதமுடனேசேர்வதற்கு

உத்தரவுசொல்லுமென்று ஒருவார்த்தைதான்கேட்டு
மனதுக்குத்தகுந்தபடி மகிழ்ச்சியுடன்செய்யுமென்ருர்
போய்வாரேனென்றுசொல்லிப் புகலறியவீரனுமே
பார்வதியின்கோயில் பதினெட்டாம்படிஏறி
என்தாயேமீனுட்சி எனக்கென்னபுத்திஎன்ருர்
மூந்தியமாலை மூதற்பூஜையுன்னுதகாண்
கம்பத்தடியில் காத்திருந்துபூஜைகொள்வாய்
என்றுசொல்லிமீனுட்சி ஏற்றவரங்கொடுத்தாள்
காளைமூத்துவீரனுந்தான் கம்பத்தடியில்வந்து
கன்றறுக்குஞ்சூரிதனைக் கையிலேதான்வாங்கி
பார்வதியேயுந்தன் பாதங்கெதியென்று
கடிகைதவருமல் கழுத்தைஅறுத்துக்கொண்டான்
வீரன்சிரசுதான் மீனுட்சிபாதம்விழ
அல்லவருங்கூடி ஆச்சரியப்பட்டார்கள்
வீற்றிருந்தசேனையுடன் வேந்தன்திருமலையை
மீனுட்சியம்மனப்போ விடுதிபோய்ச்சேருமென்ருள்
அப்படியேயெல்லோரு மரண்மனைபோய்சேர்ந்தார்கள்
அன்றுமுதல்மூன்றுநா ளாணிமூத்துவீரனுக்கு
பூஜைநமஸ்காரம் புசிப்புமேதானுமில்லை
பார்த்துநல்லவீரனுமே பதறியேகோபங்கொண்டு
இப்படிக்குத்தானிருந்தால் ஏற்காதுகலியுகத்தில்
என்றுநினைந்து எழுந்திருந்தா அந்நேரம்
மீனுட்சிசந்நிதிபோய் விதியுடனேதெண்டனிட்டு
என்தாயேமீனுட்சி எனக்குபுத்திசொன்னபடி
பட்டணத்திலுள்ளோரும் பராமரிப்பதில்லையெனை
இதுபார்த்துநீயிருந்தால் என்வயிறுபசியாதோ
ஆதலால்பட்டணத்தில் அமர்ந்தமனிதர்களை
கொள்ளைகொள்ளவெனக்கு கூறுவையேயானுக்கால்
காவடியுந்தோளேந்தி கம்பத்தடிவருவேனம்மா
என்றுதான்சொல்ல ஈஸ்வரியுந்தான்கேட்டு
கம்பத்தடிவீரா க்காரியத்தைச்சொல்லுகிறேன்
துணிவுகூறும்வீரா துள்ளாதேயிந்நேரம்
திருமலைநாய்க்கர்தான் செம்பொன்மணிமாளிகையில்
உள்ளேநுழைந்து உபாயமொன்றைச்செய்வாய்நீ
அவ்விடத்திலுள்ளவரை அதட்டிமிகச்சொற்பனத்தை
பண்ணிவந்தபூஜை பாங்குடனேவாங்குமென்ருள்

என்தாயேமீனாட்சி இதுபோதுமென்றுசொல்லி
திருமலைநாய்க்கர்தன் செம்பொன்மணிமாளிகையில்
ஆக்கிரமித்துப்போய் அதட்டித்தொடைதட்டி
நஞ்சுதின்றுநஞ்சறுக்கும் நடுச்சாமவேளையிலே
பட்டணத்திலுள்ள பாரமுனிகளெல்லாம்
வண்டத்துரைவீரன் வருகின்றவழிதனிலே
எதிரேவரப்பயந்து எல்லோருந்தாமொளிப்பார்
மன்னன் அரண்மனையில் மதிலேறிவீரன்போய்
சப்பிரமஞ்சக்கூடத்தில் தனித்துச்சயனஞ்செய்யும்
திருமலைநாய்க்கர்தனைச் செவ்வையாய்த்தான்பார்த்து
தோட்டிபோலுருக்காட்டி சொர்ப்பனஞ்சாதித்தான்
வேர்த்துவிடவிடத்து விழித்துமெள்ளத்தான்பார்த்து
பதறிஎழுந்திருந்து பைங்கிளியைத்தானெழுப்பி
காணுதசொர்ப்பனந்தான் கண்டுபயந்தேனடி
என்றுசொல்லக்கேட்டு இயற்கையுள்ளபெண்ஜாதி
எதுநடந்தாலும் ஈஸ்வரியாள்மீனாட்சி
பொற்பாதந்துணையொழிய புகலுவதற்கேதுமில்லை
மன்னர்க்குத்தேருதல் மங்கையருந்தானுரைத்தாள்
சொல்லுகிறவார்த்தையெலாந் துரைவீரன்கேட்டிருந்
ஆகட்டுமென்று அரண்மனையைவிட்டுமெள்ள [து
கோட்டைதலைவாசல் குதிரைலாயம்புகுந்து
பஞ்சகல்யாணி பட்டத்துக்குதிரையும்
அறுத்தானரைநொடியி லாங்காரங்கொண்டவன்காண்
மாட்டுமந்தையிற்புகுந்து மகாபூசைகொண்டவன்காண்
உக்ரமுள்ளசேவகர்கள் ஒருநூறுதலையாரி
படுத்திருக்குஞ்சாவடியில் பாங்குடனேபோய்ப்புகுந்து
சுழற்றிஎறிந்தான்காண் சுற்றுமதிற்கப்பாலே
ஆனைகட்டும்லாயத்தில் அஞ்சாமல்வீரன்போய்
மண்டியிட்டுவீரன் மதயானையைஅடக்கி
கன்னிகைப்பெண்கள் கண்ணுறங்கும்வேளையிலே
கன்னியர்களுக்கருகில்வந்து காலைமுத்துவீரனுந்தான்
அபயமென்றசத்தம் அண்டமெல்லாம்தானதிர
காரணனுந்தென்மதுரை கப்பத்தடியில்வந்தான்
அன்றிரவுசென்று அலர்கதிரோன்வந்துதித்தான்
கச்சித்திருமலையர் காலையிலெழுந்திருந்து
கால்கைகள்சுத்திசெய்து கனத்தபணிபூண்டு

கட்டியங்கள்கூறக் கவரிதனைவீச
நாகசுரமேளம் நாட்டியங்களாடிவர
மந்திரிகள்சேனை மகிழுமன்னர்கூட்டமுடன்
ஆசாரவாசல்விட்டு அரண்மனையுந்தான்கடந்து
சொக்கரதுசந்நிதிக்கு துருசாகஓடிவந்து
அங்கயற்கண்மீனாட்சி அம்மனுடசந்நிதியில்
மீனாட்சிமுன்பாக வேந்தன்விரைவில்வந்து
மூக்கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டு
என்தாயேமீனாட்சி ஈஸ்வரியேஇப்போது
காணாதசொர்ப்பனங்கள் கண்டவிதங்களென்ன
அதிசயங்கள்வந்தவகை அடியேன்அறிவதற்கு
வழியாயுரைக்கவேணும் வாய்மையுள்ளஈஸ்வரியே
பார்வேந்தனப்போது பாதத்தில்தான்விழுந்தான்
வாழ்மதுரைசொக்கரும் மதுரைமீனாட்சியரும்
அப்பாமகனே அதிசயங்கள்வந்தவகை
காரணமாய்வந்ததைக் கம்பத்தடிவீரன்
பட்டபாடெல்லாம் பாரோர்நினைக்கவில்லை
பொந்திபசிமெத்த பொல்லாதவீரனுக்கு
உண்டானதினாலே ஓடிவந்தான்உன்மனைக்கு
வீரன்குறையொழிய வேறொன்றுந்தானுமில்லை
பட்டணமெங்கும் பலதெருவார்பூஜைசெய்ய
கம்பத்தடியில்வந்து காணிக்கைதானும்வைத்து
சந்துக்குச்சந்து தனிபூஜைதானுமிட்டு
இந்தப்படிக்கு இஷ்டமுடனேதொழுதால்
வீரன்குறைதீர்ந்து வெகுவாய்மனங்களிப்பான்
என்றுசொல்லிஈஸ்வரியும் இதமுடனேவாக்குரைக்க
திருமலைநாய்க்கர் சீக்கிரத்தில்தானெழுந்து
கம்பத்தடியில்வந்து காளைமுத்துவீரனுக்கு
ஐந்நூறுபொன்கொண்டு அபிஷேகம்பண்ணிவைத்து
மண்டபமுங்கட்டிவைத்து மகாபூஜையுங்கொடுத்து
தேங்காயுடைத்து தூபதீபங்கொடுத்து
இளநீருஞ்செங்கரும்பு மிதமானபால்பழமும்
வீதிக்குவீதி வேணமட்டும்பூஜையிட
சந்துக்குச்சந்து தனிப்பூஜைதானுமிட
எல்லோரறிய எங்கும்பறையறைய
மதுரையிலுள்ளோர்கள் வகையுடனேதானுமப்போ

வீதிக்குவீதி வேணபடிபூஜையிட்டார்
வீரனிடத்திற்கு வேந்தன்வந்தேதொழுது
மூப்பழமுமிட்டு மூன்பூஜைபோடுகிறேன்
வந்தவினைகளெல்லாம் மாளவேசெய்யுமையா
என்றுசொல்லி நாய்க்கரும் இதமாகக்கைதொழுதார்
இப்படியாக இருக்குமந்தவேளையிலே
கோட்டைகுறிக்காரன் குமாரமுத்துநாய்க்கன்மேல்
ஆவேசம்வந்து அவன்பேரில்கொக்கரித்து
திருவாய்மலர்ந்து செப்பலுற்ருரந்நேரம்
என்னை நினைக்காமல் இதுவரையிலேயிருந்தீர்
பொருந்திபசியாறி பூரித்தேனிப்போது
என்பெயரைச்சொல்லி ஈய்ந்தால்விபூதிதன்னை
வந்தபிணிநோயும் மானிடர்க்குத்திருமப்பா
என்றுதெளிவாக இதமாகத்தான்சொல்லி
மூன்னிருந்தசேனையெல்லாம் மூழுதுமெழுந்திருக்கச்
செய்துமலைஏறி சென்றுதே ஆவேசம்
திருமலைநாய்க்கர் திருநீறுதான்கொண்டு
அரண்மனைக்குச்சென்று ஆயிழைக்குத்தான்கொடுத்து
ஆண்பிள்ளைபிறந்தால் ஆணிமுத்துவீரனென்று
இடவேணும்பேரென்று இயம்பினுர்நாய்க்கரும்
கும்பிட்டுவாங்கி குயில்மொழியாள்தான்தரித்தாள்
மூன்றுமாதஞ்சென்று மூருக்கம்பூமேனியரும்
புத்திரனுமுண்டானுள் பொற்கொடியுமப்போது
பத்தானமாதத்தில் பாலனையும்பெற்றெடுத்தாள்
பிள்ளைக்குவீரன் பேர்வைத்துஅந்நேரம்
ஐந்நூறுவண்டியில் ஆனதொருசர்க்கரையும்
மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
ஒன்பதுகாதவழி ஊர்தோறுஞ்சர்க்கரைகள்
வீதிக்குவீதி வேணமட்டும்வழங்கிவர
வேதியர்க்கெல்லாம் வெகுவாய்த்தானங்கொடுத்தார்
சொக்கருடன்மீனுட்சி தலங்குமதிற்கோயிற்சென்று
மூக்கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டு
அறுபதுபொன்னெடுத்து அபிஷேகம்பண்ணிவைத்
அரண்மனைக்குவந்து அரசன்திருமலையும் [து
வீரனுக்குப்பூஜை விதமுடனேசெய்து
பூதலத்திலுள்ளவர்கள் பூஜைகொடுப்பார்கள்

1|2|85

உன்காவலுன்னடிமை உண்மையுள்ளவீரையனே
தற்காத்துக்கொண்டு தயவாகக்காருமையா
ஐயாவேவீரனே அனைவரையுங்காத்திடுவாய்
அவரவர்பங்கில் அனுதினமும் நீயிருந்து
என்னையுங்காத்து இரட்சிக்கவேணுமையா
என்றுதிருமலையன் இன்பமுடனேதொழுது
வாழ்மதுரைசொக்கர் மதுரைமீனாட்சியம்மாள்
தங்கள்கிருபையினால் தாரணியோர்வாழ்ந்திருக்க
நாடுதழைக்க நல்லமழைதான்பொழிய

வாழி

தேவர்களும்வாழி தேசத்தோர்கள்வாழி
அங்கயற்கண்மீனாட்சி அம்மையுந்தான்வாழி
பாடினோர்வாழி படித்தோருந்தான்வாழி
கேட்டோர்கிளைதழைத்துக் கீர்த்தியுடனேவாழி
மாடுகன்றுமக்கள் மருமக்கள்தான்வாழி
வீரனைப்பூசிக்கும் வேல்வீரர்கள்தான்வாழி
இக்கதையையச்சி லியற்றுவோர்தான்வாழி
பூதலத்திலுள்ள புண்ணியர்கள்தான்வாழி
வாழிவாழிஎன்றுசொல்லி வரமளித்தாரீஸ்வரனார்

பலஸ்ருதி

இம்மதுரைவீரன் அம்மானையைப் படித்தவர்களுக்கும் கேட்டவர்களுக்கும் சுக்கிரவாரந்தோறும் பூஜை செய்பவர்களுக்கும் கலியாணங் கூடிவரும்; உத்தியோகம் வரும்; வியாதியால் மெலிகின்றவர்களுக்கும் வியாதி நீங்கிவிடும்; மனக்கவலை நீங்கிவிடும்; சகலபாக்கியமும் சந்தான சம்பத்தும் அஷ்டயிஸ்வரியமும் தனகனக வஸ்துவும் தீர்க்காயுசும் புத்திரசம்பத்தும் மாடுகள் கன்றுகள் தழைத்து பயிர்களெல்லாம் நீடூழி ஓங்கி அழிவில்லாப் பெருமையுண்டாகும். இந்தப்படியாகக் காசிகாண்டத்தில் வியாசரால் சொல்லிய கவிகளிலிருந்ததை இக் கதைக்காக மொழி பெயர்த்து அருளியது. சுபம்! சுபம்!!

மதுரைவீரசுவாமி கதை முற்றிற்று.

மலர்மகள் விலாசம் பிரஸ், சென்னை-1. (24-5-57)